New Master
INSTITUTE
B.M.G. Lane, JAFFNA

A/L 87 AUG.
ஒலியியல்
திரு. வர்ணம்
திங்கள் -- வெள்ளி
பிற்பகல் 3-00 மணி

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

A/L 89
பிரிவு: II
ஆரம்பம் 28-03-87
விலங்கியல் - நாகநாதன்
தாவரவியல் - குகதாசன்
பௌதிகவியல் - வர்ணம்
இரசாயனவியல் -
தில்லைநாதன்
தூய -[பிரயோக கணிதம் -
திரு நல்லையா
New Master
INSTITUTE
B.M.G. Lane, JAFFNA.

மலர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸூ பங்குனி மீ 14 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 27 (28-03-1987) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY இதழ் 10

## கருத்துக் கலசம்

### மூலவளமும் மனிதவளமும்

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் செழிப்பும், விருத்தியும் முக்கியமாக இரண்டு வளங்களில் தங்கியுள்ளன. ஒன்று அந்தப் பகுதி மக்களின் மனித வளம்; அடுத்தது குறிப்பிட்ட பிரதேசத்தின் மூலவளம்.

மனித வளம் என்பது கல்வி, தொழிற் திறமை, மனித சக்தி, உழைக்கும் சக்தி, உற்பத்திப் பரிமாணம் என்பவற்றையும் உள்ளடக்கியதாகும்.

மூலவளம் சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் இயற்கை வளங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகும்.

ஒரு நாடு அல்லது பிரதேசம் தனது தேவைகளில் அனேகமானவற்றைத் தானே பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். அதாவது இயன்றவரை சகலதுறைகளிலும் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் வல்லமை கொண்டதாக விளங்க வேண்டும் அப்போதுதான் அது பிறரை நம்பியிராது. அவர்களின் தயவில் தங்கி இருக்காது சொந்தக் காலில் நிற்க முடியும். அதனாலே காந்தி அடிகள் சுதேசியம் என்றார் சுதேசியமே சுயராஜ்யத்தின் அத்திவாரம் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார்.

சுயராஜ்யம் என்பது சுயாட்சியே. மக்கள் தம்மைத் தாமே ஆள்வதே சுயாட்சி

நாம் இப்போது நடத்தும் போராட்டம் சுயாட்சிக்காகவே; சுயராஜ்யத்துக்காகவே. ஆகையால் சுதேசியத்தின் மகத்துவத்தை எல்லோரும் புரிந்து கொள்வது அவசியம். உள்ளூர் உற்பத்திகளைப் பாவிக்கவும் அவற்றுக்கு ஆதரவளிக்கவும் எம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும்.

சுதேசியம் வளர்வதற்கு எமது மனித வளமும், மூல வளமும், தக்க முறையில், உரிய வழிகளில் பயன்படுத்தப்பட வேண்டும்.

எமது பிரதேசங்களின் சகல மூல வளங்களையும் இனம் காணுதல் அவசியம். அந்த மூலவளங்களை எமது தேவைக்குப் பயன்படுத்தும்விதத்தில் மனித வளத்தை விருத்திசெய்ய வேண்டும்.

மனிதவளத்தில் கல்வி, தொழிற் திறமை, மனித சக்தி ஆகியவை ஒன்றுக்கு மற்றது மிக நெருங்கிய தொடர்பு உடையவை.

ஒன்றில்லாமல் மற்றதால் பயனில்லை. எனவே வெறும் ஏட்டுக் கல்வியுடன் மாணவர் திருப்திப்படக் கூடாது. அதுவே வாழ்க்கைக்கு வழி செய்யும் என நினைத்து விடலாகாது. தொழிற் கல்வியையும் பயிலவேண்டும். அப்போது தான் மாணவரின் மனித சக்தி நாட்டுக்கும் அவர்களுக்கும் நல்ல முறையில் பயன்படும்.

மாணவர்களுக்கு மனித, மூலவளங்களைப் பயன்படுத்தும் மனப்பாங்கும் தேவை என்று தொழில்நுட்பக் கல்வி அதிகாரி திரு. சுப்பிரமணியம் தெரிவித்திருப்பது அதனைக் கருத்திற் கொண்டே என எண்ணு

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஊறணியில் கண்ணி 12 படையினர் மரணம்

## வலி வடக்கில் நேற்றும்

### 2 ஆவது நாளாக உக்கிர மோதல்

— பலாலிச் செய்தியாளர் : கே. என் ராஜா —

பலாலி, மார்ச் 28

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளில் தொடர்ந்து நேற்றும், அரசாங்கப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உக்கிரமான மோதல் நிகழ்ந்தது.

நேற்று ஊறணியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் டிரக் ஒன்று தூக்கி வீசப்பட்டது. பன்னிரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து மூன்று ஹெலிக்கொப்டர்களும் பொம்மர் ஒன்றும், பீரங்கிப் படகுகளும் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தின.

காங்கேசன்துறை ஹாபர்வியூ விடுதி முகாமில் இருந்து பலாலிமுகாமுக்கு இராணுவத் தளபாடங்களை ஏற்றிவர நேற்றுக்காலை நடையவியாக, கனரக, கவச வாகனங்கள், டிரக்குகள், லொறிகள் சகிதம் பல நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் சென்றனர். "கொள் வோய்" ஆகச் சென்ற படையினர்மீது அருகருகேஇரண்டு இடங்களில் புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 12 சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

நேற்றுக் காலை சுமார் 8 மணியில் இருந்த பிற்பகல் ஒருமணி வரை அப்பகுதிகளில் நடைபெற்ற மோதல்களின் போது போராளிகள் தரப்பில் இழப்போ, எவருக்கும் காயமோ ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தரப்பில் அப்புத்துரை மனோகரன் (27 வயது), ச. கதிரவேலு (40 வயது), சின்னவன் இரத்தினராசா (26 வயது), சின்னத்துரை சரவணபவன் (36 வயது), சோமசுந்தரம் சோதியம்மாள் (19 வயது), என். அருந்தவம் (23 வயது) ஆகியோர் படுகாயமடைந்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இராணுவத் தாக்குதலை எதிர்பார்த்து ஏற்கனவே மக்கள் அப்பகுதிகளிலிருந்து வெளியேறிவிட்டதால் பொதுமக்களிற்கு அதிக இழப்புகள் ஏற்படவில்லை.

இத் தாக்குதல் சம்ப

(8ஆம் பக்கம் பார்க்க)

### துண்டான காற்பாதம் பார்வைக்கு

பலாலி, மார்ச் 28

நேற்று இராணுவம் மீது புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலின்போது உயிரிழந்த சிப்பாய்களில் ஒருவரது துண்டிக்கப்பட்ட காற்பாதம் புலிகளினால் மீட்கப்பட்டுள்ளது.

இப்பாதமும் அதனை மூடியிருந்த கன்வஸ் சப்பாத்தும் தெல்லிப்பளைச் சந்தியில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

(உ-119)

### சுன்னாகத்தில் யுத்தக் கைதிகள்

பலாலி, மார்ச் 28

கடந்த தினங்களில் அதிகாலை புலிகளால் பிடிக்கப்பட்ட யுத்தக் கைதிகள் நேற்று சுன்னாகத்தில் பொது மக்களின் பார்வைக்காக அமர்த்தப்பட்டிருந்தனர்.

யுத்தக் கைதிகளைப் பார்க்க பெருந்தொகையான மக்கள் நீண்ட கியூக்களில் நின்றுகொண்டிருந்தனர். (உ-119)

### வடக்கு கிழக்கில் 201 முகாம்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 201 ஆயுதப் படை முகாம்கள் தற்போது உள்ளன.

இவற்றில் தரைப்படை முகாம்கள், ஊர்காவல் படைமுகாம்கள், எல்லைப் படை முகாம்கள் ஆகியனவும் அடங்கும்.

திருகோணமலைமாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையில் இம் முகாம்கள் உள்ளன

மாவட்டரீதியாக முகாம்களின் எண்ணிக்கை வருமாறு:-

| | | |
|---|---|---|
| திருகோணமலை | - | 61 |
| மட்டக்களப்பு | - | 31 |
| அம்பாறை | - | 30 |
| வவுனியா | - | 25 |
| யாழ்ப்பாணம் | - | 19 |
| மன்னார் | - | 16 |
| முல்லைத்தீவு | - | 10 |
| கிளிநொச்சி | - | 09 |

(உ-எ)

# நாவற்குழி, கைதடியில் பொம்மர், ஹெலித் தாக்கு

## வயோதிபர் இல்லம் சேதம்

கைதடி, மார்ச் 28

நாவற்குழி, கைதடிப் பகுதிகளில் நேற்றுக் காலை குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல்கள் நடத்தின.

இதே வேளை வியாழன் மாலை கைதடிப் பகுதியில் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் நடத்திய ஷெல் தாக்குதலில் கைதடி வயோதிபர் இல்லமும், சைவச் சிறுவர் இல்லமும் சேதமடைந்தன.

வயோதிபர் இல்லத்தில் வயோதிபர் விடுதிப் பகுதியின் மீது விமானத் தாக்குதல் நடைபெற்ற சமயம் அங்கிருந்த வயோதிபர்கள் சாப்பாட்டிற்காக சாப்பாட்டறைக்குச் சென்றிருந்தனர். அதனால் வயோதிபர் அனைவரும் தெய்வாதீனமாகப் பாதிப்பின்றிப் பிழைத்துக் கொண்டனர். வயோதிபர் இல்லம் கடும் சேதமுற்றது.

சைவச் சிறுவர் இல்லத்தின் கூரைப் பகுதி பெரும் சேதம் அடைந்தது.

இதே வேளை கைதடி, நாவற்குழிப் பகுதியில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் தொடர்ந்து கடும் மோதல் நடைபெற்றது.

அப்பகுதியில் பொம்மரும் ஹெலியும் நடத்திய ஆகாயத் தாக்குதலில் நான்கு பேர் காயமடைந்தனர். மூன்று வாகனங்களும், நாவற்குழி வீடமைப்புத் திட்டப் பகுதிகளில் நான்கு வீடுகளும், அரியாலைப் பகுதியில் இரண்டு வீடுகளும் சேதமுற்றன.

அப்பகுதியில் வீதியால் சென்ற வாகனங்களை நேற்று மாலை வரை ஹெலிக்கொப்டர்கள் துரத்தித் துரத்திச் சுட்டன. இதன்காரணமாக நேற்று கைதடி-கோப்பாய் பாலத்தினூடாக போக்குவரத்து நடத்திய வாகனங்கள் புத்தூர் வழியாக போக்குவரத்து நடத்தின.

(உ-74-10)

# பிரச்சினை நீடித்தால் சிங்களவருக்கே பாதிப்பு

## நிலைமையை உணருகின்றார் ஜே. ஆர்.

கொழும்பு, மார்ச் 28

இனப்பிரச்சினையை மேலும் நீடிக்க அனுமதிப்பின் அது சிங்கள இனத்துக்கே பாதகமாக முடியும்

ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்கண்டவாறு நேற்றுத் தெரிவித்தார்.

ஜெயவர்த்தனபுரவில் நடந்த கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பேசுகையில் மேலும் சொன்னதாவது:-

மேடைப் பேச்சுக்கள் மூலமும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்று தந்தி அடிப்பதன் மூலமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

எனது அரசு ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டது. எனவே இந்த அரசு தயாரித்துள்ள யோசனைகளுக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி மதிப்பளிப்பார் என்று நம்புகின்றேன்.

அஹிம்சை வழியில் செல்பவர்களுக்கு இந்த அரசு சில சலுகைகளை வழங்கும். இந்த உண்மையை எனது அரசு உலகுக்கு வெளிப்படையாக எடுத்துக் கூறியுள்ளது.

பிரச்சினைக்குத் தீர்வு காண சகல பிரிவினரும் உதவவேண்டும்.

இப்பிரச்சினையை இனியும் இழுத்துக்கொண்டு போக அனுமதிக்கக் கூடாது.

அப்படி அனுமதிப்பின் அது சிங்கள சமூகத்துக்கே பாதகமாக, பாதிப்பாக முடியும்

—இப்படி ஜனாதிபதி சொன்னார். (உ-எ)




சஞ்சீவிக்கு கிட்டு பேட்டி

# சிப்பாய்களை விடுவிக்க

## அரச அதிகாரிகளே வரவேண்டும்

### நிபந்தனையில் மாற்றமில்லை எனவும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்28

விடுதலைப் புலிகளின் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் சிப்பாய்களை விடுதலை செய்வதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் இருந்தே உயரதிகாரிகள்வரவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு கிட்டு தெரிவித்தார்.

வவுனியா பௌத்த குரு சியம்பலகஸ்வெவ விமலசாரதேரோ பத்திரிகைகள் மூலமாக கிட்டு விடம் அனுமதி கோரியதுபற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்த ஒரு மதகுருவோ, பிக்குவோ என்னிடம் இதுபற்றி நேரடியாகத் தொடர்புகொண்டு பேசவில்லை.

சென்றமுறை அடம்பனில் கைதுசெய்யப்பட்ட சிப்பாய்களை விடுதலை செய்வதற்காக ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்காவை நாமே அழைத்திருந்தோம்.

ஆனால் இம்முறை நாம் யாரையும் வலிந்து அழைக்கமாட்டோம்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் இருக்கும் உயரதிகாரிகளே படியிறங்கி வர வேண்டும்.

நாம் ஏற்கனவே ஸ்ரீலங்கா அரசுக்கு விதித்த நிபந்தனையில் இருந்து இம்மியளவும் விலகமாட்டோம்.

எட்டுச் சிப்பாய்களையும் விடுவிப்பதற்கு விடுதலைப்புலிகள் 20தொடக்கம் 25 பேரை விடுவிக்க வேண்டும் என்ற நிபந்தனையில் எதுவித மாற்றமும் செய்யப்படமாட்டாது.

- இவ்வாறு திரு.கிட்டு தெரிவித்தார். (உ-10)

**சுபநேரம்**
28-03-1987
சனிக்கிழமை

சுபநேரம்:
3-14 முதல் 4-44 வரை ராகுகாலம்।
9-14 முதல் 10-44 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# எம்.ஜி ஆர்., இணை அமைச்சர்கள் தமிழர் அமைப்புகளுடன் பேச்சு

சென்னை, மார்ச் 28

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் கடந்த வியாழன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் உட்பட பல தமிழர் அமைப்புப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசினார்.

இதேவேளை நேற்றுக் காலை இணை அமைச்சர்கள் நட்வர்சிங், சிதம்பரம் ஆகியோர் முதலமைச்சர் இராமச்சந்திரனைச் சந்தித்து இலங்கை இனப் பிரச்சினை பற்றி பேசினார்கள்.

இச் சந்திப்பு ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது

பின்னர் இரண்டு இணை அமைச்சர்களும் தமிழ்ப்போராளி அமைப்புக்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். இச் சந்திப்பும் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக நீடித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகளுடனே பேசி அமைச்சர் குழு பேச்சுவார்த்தை நடத்தியது.

எல்லாச் சந்திப்புக்களிலும் தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் கலந்து கொண்டார்

இனப் பிரச்சினைத் தீர்விற்கான டிசம்பர் 19 யோசனையை மையமாக வைத்தே இப்பேச்சுகள் நடைபெற்றன. (உ-எ)

போராளிகளுக்கு எதிராகப் போரிட

# இலங்கைக்கு பாக். ஆயுத 'சப்ளை'

லண்டன், மார்ச் 27

தமிழ் போராளிகளுக்கு எதிராக போராடுவதற்காக இலங்கை அரசு பாகிஸ்தானிடமிருந்து 10 லட்சம் டாலர் (இலங்கை நாணயத்தில் இரண்டரைக் கோடி ரூபாவுக்கும் அதிகமான) பெறுமதியுடைய ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் தற்போது விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸ ஆயுதக் கொள்வனவு குறித்து பாகிஸ்தான் தலைவர்களுடன்மேலும் பேச்சுவார்த்தை நடத்துவாரா என்பது குறித்து தமக்கு ஏதும் தெரியாது என அவர் சொன்னார். (உ)

# பயணிகள் வான்மீது ஹெலித் தாக்குதல்

## ஆசிரியை உட்பட இருவர் காயம்

மினிவானில் சென்ற பயணிகள்மீது நேற்று ஹெலிக்கொப்டரில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் வானில் பயணம் செய்த ஆசிரியை உட்பட இருவர் காயமடைந்தனர். வானும் சேதமடைந்தது

நேற்றுக்காலை எட்டு மணியளவில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு முன்பாக இந்தச் சம்பவம் நடைபெற்றது

புத்தூர் சோமாஸ்கந்த வித்தியாலய ஆசிரியை திருமதி யோகேஸ்வரி ராஜசேகரம் (40 வயது) என்பவரே காயமடைந்தவராவர். இவர் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியைச் சேர்ந்தவர்.

ஒரு சிறு குழந்தையும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தது. (உ-10)

### திரும்பினர்

யாழ் பொலிஸ் நிலைய பொலீஸ் உத்தியோகத்தர்கள் நேற்றுக் கடமைக்குச் சென்றனர்.

பொலீஸ் காவலிடப்பின் ஒருவர் இராணுவத்தின் வேட்டைக்கு இலக்கானதை யடுத்து கடந்த இரு நாட்களாக யாழ் பொலீஸ் நிலையத்துக்கு தமிழ் பொலீஸார் எவரும் செல்லவில்லை.

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகண்ட நாம ஜப யக்ஞம் பாவம் பொசுக்கி உலகை ரட்சிக்கும்

'யக்ஞங்களில் நான் ஜப யக்ஞமாக இருக்கிறேன்' என்கிறார் கீதையில் கண்ணன்

'அரன்நாமமே சூழ்க, வையகமுந் துயர் தீர்கவே' என்கிறார் சம்பந்தர்.

'நமச்சிவாய வாழ்க'

'போற்றி ஓம் நமச்சிவாய'

'நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே'

'நற்றுணையாவது நமச்சிவாயவே'

'நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே' என்ற திருமுறைகளின் கருத்தெல்லாம் இறைவனுக்கு நிகரானது அவனது திருநாமம் என்பதை விளக்குகின்றன.

தராசின் ஒரு தட்டில் இறைவனையும் இன்னொரு தட்டில் அவனது திருநாமத்தையும் வைத்தால் இரண்டும் சமமாகவே விளங்கும். கிருஷ்ண பரமாத்மாவின் நிறைக்குச் சத்தியபாமா இட்ட பொன் அணிகளுக்கும் வேறு இரத்தினங்களுக்கும் சமமாக ருக்மணி தேவி இட்டது என்ன? கிருஷ்ணபரமாத்மாவின் நாமத்தை ஜபம் செய்த ஒரு சிறிய துளசி இலை தான்.

இறைவனின் நாம ஜபத்தின் மகிமைக்கான எடுத்துக்காட்டே இந்த வரலாறு.

தனிப்பட்ட ஒருவர் தம் சொந்த முன்னேற்றத்திற்காகவோ, அல்லது உலக நன்மைக்காகவோ செய்யும் நாம ஜபம் வலுவானதுதான்.

**சமயம்**

ஆனால் அதே நாம ஜபத்தைக் கூட்டுவழிபாடாகப் பலர் சேர்ந்து செய்யும்போது அந்த ஜபத்தின் வலிமை இன்னும் பன்மடங்காகிறது

குவிந்த மனதுடன் ஒன்று சேர்ந்து பலர் செய்யும் அகண்டநாம ஜபயக்ஞம் பாவங்களைப் போக்கி உலகத்தை இரட்சிக்கும் வலுப் பெற்றதாகின்றது.

இறைநாமம் ஒருமுகமாக முழங்கும் இடத்தில் தேவதைகளும் பிதிருக்களும் மகிழ்ச்சியாக நடனமாடுகின்றார்களாம். வீட்டு அமைதிக்கும் நாட்டு அமைதிக்கும் உலக அமைதிக்கும் வழி வகுக்கும் இந்த அகண்ட நாம ஜபயக்ஞம் நடைபெறுவது பற்றிச் சில சிந்திப்போம்.

ஆலயங்களிலோ, மடங்களிலோ, பொதுவழிபாட்டு நிலையங்களிலோ இந்த வழிபாடு அமைவது நல்லது. வீடுகளிலும் செய்யலாம். அகண்டநாம ஜபயக்ஞம் நடைபெறும் இடம் ஒரு கோயிலானால் அந்தக் கோயிலில் உள்ள தெய்வத்தின் திருநாமமே தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

விநாயகர் ஆலயம் — ஓம் மகா கணபதியே நம.

சிவாலயம் — சிவாய நம; ஓம் சிவாய நம;

**ஆத்மஜோதி நா. முத்தையா**

சிவாயநம; ஓம் சிவாய நம.

விஷ்ணு ஆலயம் — ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே, ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே.

தேவி ஆலயம் — ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

முருகன் ஆலயம்— ஓம் சரவண பவ ஓம் சரவண பவ ஓம் சரவணபவ ஓம்.

தூய்மை செய்யப்பட்டுக் கோலமிட்டு அலங்கரிக்கப்பட்ட இடத்தில் குத்துவிளக்கு ஒன்றைப் பீடத்தில் வைக்க வேண்டும். குத்துவிளக்கிற்குப் பதிலாக இறைவன் திரு உருவச்சிலை அல்லது படம் கூட வைக்கலாம். காலை சுமார் நான்கு மணிக்கு இந்த வழிபாட்டில் கலந்து கொள்பவர்கள் குளித்துத் திருநீறு முதலிய சமயச் சின்னங்கள் அணிந்து தூயமனத்துடன் வரவேண்டும்.

இறைவன் சந்நிதியில் எரியும் தீபத்திலிருந்து ஏற்றப்பட்ட விளக்கால் குத்துவிளக்கில் உள்ள இரு திரிகளையும் ஏற்ற வேண்டும். கோயிலில் உள்ள இறைவனை நமக்கு அருள் புரியும் பொருட்டு இந்தக் குத்துவிளக்கில் எழுந்தருளச் செய்கிறோம் என்பதே இதன் பொருள். எந்த மந்திரத்தைத் தேர்ந்தெடுக்கிறோமோ, அந்தத் தெய்வத்திற்கு அஷ்டோத்தரசதநாம அர்ச்சனை செய்து தூபதீப நைவேத்தியம் காட்டி தீபாராதனை செய்ய வேண்டும்

பிறகு தேர்ந்தெடுத்த மந்திரத்தை ஒருவர் அல்லது இருவர் முதலில் சொல்ல மற்றவர்கள் திருப்பிச் சொல்லிய படியே குத்துவிளக்கை வட்டமாக வலம்வர வேண்டும். இருபுறமும் வரிசையாக அமர்ந்த நிலையிலும் சொல்லலாம். ஆனால் இரவிலும் கண் விழித்து ஜபம் செய்ய வேண்டி இருக்கும்போது வலம் வந்தபடியே இருந்தால் தூக்கத்தைத் தவிர்க்கலாம்

இவ்வாறே குறிப்பிட்டிருந்த நேரம் வரை இடைவிடாமல் நாம் வழிபாடு செய்த பின்பு, காயத்திரிஜபம், பஜனைகள், பாராயணங்கள், செய்து முன்பு போலவே குத்துவிளக்கிற்குத் தூப தீப நைவேத்தியங்கள் காட்டி அஷ்டோத்தர சதநாம அர்ச்சனை செய்து தீபாராதனை செய்து குத்துவிளக்கை நிறைக்க வேண்டும். ✱

## கடல் கடந்த கடிதம்

### "அதை"யும் பருகலாமா?

தம்பி,

அண்மையிலே-பம்பாயிலே-ஒரு மருத்துவக் கருத்தரங்கு; பயங்கரமான எயிட்ஸ் நோய் பற்றியும் ஆராய்வு. முன்னாள் பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாயும் பேசினார். சிறுநீர் சிகிச்சை முறையால் இந்த நோயைக் குணப்படுத்தலாம் எனக் கூறினார். கூடியிருந்த நிபுணர்கள், தம்பி, முகம் சுளிக்காது அது பற்றியும் ஆராய ஒப்புக் கொண்டனர்!

நீண்டகாலமாகச் சிறுநீர்ச் சிகிச்சை எடுத்து வருபவர் தேசாய்; தொண்ணூறு வயதுக்கு மேலாகியும் இன்னும் உடல்நலத்தோடு வாழ்ந்து வருகிறார்! சில வருடங்களுக்கு முன் இதுபற்றி அவர் பகிரங்கமாகப் பேசியபோது, கலைஞர் கருணாநிதி உட்படக் கேலி பேசியோர் பலர்.

பதினெண்சித்தர் பாடல்களிலும், வைத்திய நூல்களிலும் சிறுநீரை அமுரிகற்பம் எனக் குறிப்பிடுகிறார்கள் திருமூலர் பாடிய திருமந்திரத்தில் இவ்வைத்தியமுறை கூறப்படுகின்றது 845 முதல் 850 வரை - ஆறு பாடல்களில் - அமுரிதாரணை என இது விளக்கப்படுகின்றது ஒரு வையளவு தினசரி பருகி வந்தால் உடல் பொன் மயமாகும்; நரை திரை நீங்கும்.

மிளகு, நெல்லி, மஞ்சள் வேம்பு ஆகியவற்றைச் சிறுநீருடன் கலந்துண்டால் மேனி மென்மையுறும்! இதனை வீரமருந்து என்கிறார் திருமூலர்.

விஞ்ஞான மருத்துவ முறைகள் வந்துவிட்டதே என நம்பி, தம்பி, இயற்கை வைத்தியத்தைக் கைவிடலாமா?

முன்னோர் அளித்த அரும் பெரும் செல்வங்களை - வாழ்க்கை முறைகளை - விஞ்ஞானப் புதுமயக்கில் கைநழுவிப் போக விடலாமா?

—விஞ்ஞானத் தொழில் நுட்ப உதவியுடன் அவற்றை மீளாய்வு செய்து, ஏற்க வேண்டியதை ஏற்பதில் என்ன தவறு?

அன்புடன்
— சிவா —

# "ஈழத்தில் புலிக்கொடி பறக்கும்" என்ற புலவனின் தீர்க்க தரிசனம் பலித்தது!

ஆப்கானிஸ்தானத்தில் ஆதிக்கம் பெறும் ஒரு பேரரசு இந்திய உபகண்டத்திலும் அதிகாரம் செலுத்த முற்படும் என்பது ஒரு வரலாற்று முதுமொழி. அதேபோல தென்னிந்தியாவிலே காவிரிக்கரையில் ஆதிக்கம்பெறும் ஒரு பேரரசு ஈழத்தையும் கட்டியாள முற்படும் என்ற ஒரு வரலாற்று முதுமொழியும் உளது.

புவிசார் கேந்திர முக்கியத்துவத் தினடிப்படையில் வரலாற்றுப் போக்கிற்கு விளக்கம் தர முயல்வோரின் ஆய்வுச் சிந்தனைத் தெளிவுகள் இவை. ஆப்கானிஸ்தான் பிரதேசத்தில் ஆதிக்கம் பெற்றவர்கள் இந்திய உபகண்டத்தில் அதிகாரம் செலுத்த முற்பட்டமைக்கு இ.பி. பத்தாம் நூற்றாண்டுமுதல் பதினெட்டாம் நூற்றாண்டுவரையிலான வட இந்திய வரலாறு சான்று பகரும். கஜனி முகம்மது முதல் நாதிர்ஷாவரை இந்தியாவில் நிகழ்த்திய படையெடுப்புக்கள் உணர்த்திய உண்மை அது.

காவிரிக்கரையில் ஆதிக்கம் பெற்ற அரசு ஈழத்தைக் கட்டியாள முற்பட்டு அதில் வெற்றியும் பெற்றமைக்கு முதலாம் இராஜேந்திர சோழப் பெருமன்னனின் ஆட்சிக்காலத்தில் (கி பி 1012-1042) ஈழம் முழுவதும் சோழராட்சிக்கு உட்பட்டு 1017 முதல் 1070 வரை சோழப் பேரரசின்

**பண்பாட்டுச் சிந்தனைகள்: 1**

ஒரு மாநிலமாகவே அமைந்திருந்தமை சான்றாகும். இராஜேந்திர சோழன் ஈழநாடு முழுவதையும் கைப்பற்றிய செய்தியை—

'பொருகடல் ஈழத் தரசர் முடியும் ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும் தெண்டிரை ஈழ மண்டல முழுவதும். மாபெருந் தண்டாற் கொண்ட கோப்பரகேசரி வர்மரான இராஜேந்திர தேவர்'

—எனவரும் மெய்க்கீர்த்திப் பாமாலை பறைசாற்றி நிற்கின்றது.

முதலாம் இராஜேந்திர சோழனின் காலத்துக்கு முன்பும் பலமுறை தமிழக அரசுகள் ஈழத்தின் மீது படையெடுத்துள்ளன. எனினும் அவை முழு ஈழத்தையும் வெற்றி கொண்டமைக்கோ அன்றேல் தமது அரசின் அங்கமாக முழு ஈழத்தையும் இணைத்துக் கொண்டமைக்கோ சான்றில்லை.

இராஜேந்திரனின் தந்தையான முதலாம் இராஜராஜசோழன் (கி பி 985 - 1014) மாபெரும் வீரனும் தலைசிறந்த இராஜதந்திரியுமாக விளங்கியபோதும் அவனால் ஈழத்திற் பொலநறுவை நகரம் வரையான பிரதேசங்களைக் கைப்பற்றிச் சோழப் பேரரசின் மாநிலமாக்க முடிந்ததேயன்றி முழுஈழத்தையும் வெற்றிகொள்ளவில்லை.

மகனான முதலாம் இராஜேந்திரனுக்கே அது சாத்தியமாயிற்று.

இவ்வாறு இராஜேந்திரசோழன் ஈழத்தை அடிப்படுத்துவதற்கு ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முன்பே, இத்தகைய ஒரு நிகழ்ச்சி நடக்கும் என்பதை — சோழநாடு என்றே ஒருநாள் ஈழத்தை அடிப்படுத்தும் என்பதை — சோழநாட்டுப் புலவன் ஒருவன் 'தீர்க்கதரிசன'மாக உணர்த்தியிருந்தான். உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த கிள்ளி என்ற சோழ மன்னனின் புகழ் பாடவந்த அப்பெயரறியப்படாத புலவன் சோழ மன்னனின் யானை(ப் படை) ஈழத்தை அடிப்படுத்திவிட்டது என்கிறான்.

கச்சி ஒருகால் மிதியா,
ஒரு காலால்
தச்சநீர்த் தண்டஞ்சை
தான்மிதியாப் —
பிற்றையும்
ஈழம் ஒருகால்
மிதியா வருமே
கோழியர்கோன்
கிள்ளி களிறு.

என்பது அப்பாடல்.

இதிலே, உறையூருக்குத் தலைவனான கிள்ளியின் யானை தனது ஒரு காலால் காஞ்சிபுரத்தை மிதித்தது; இன்னொரு காலால் தஞ்சாவூரை மிதித்தது; பின்னர் மற்றொரு காலால் ஈழத்தை

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

மிதித்தது எனப்பொருள் அமைகிறது.

### முத்தொள்ளாயிரம்

இப்பாடல் இடம் பெறும் இலக்கியம் முத்தொள்ளாயிரம் ஆகும். தமிழகத்து மூவேந்தரையும் அகப்பொருளிலும் புறப்பொருளிலும் புகழ்ந்தேத்தும் நோக்கில் அமைந்த இவ்விலக்கியத்தின் காலம் இற்றைவரை திட்டவட்டமாக அறியப்படவில்லை. எனினும் பொதுவாக கி.பி. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளுக்கு முன்பின்னாக இந்நூலின் பாடல்கள் பாடப்பட்டிருக்கலாம் என்பது இலக்கிய வரலாற்று ஊகம் ஆகும்.

பரம்பரைப் பெருமை மிக்க மூவேந்தர் குலங்கள் களப்பிரர், முத்தரையர், பல்லவர் ஆகியோரின் ஆட்சியில் வலுகுன்றி ஒடுங்கியிருந்த ஒருகாலப் பகுதி அது. அக்காலத்தில் அக்குலங்களது பண்டைப் பெருமையை நினைவுகூர்ந்தும் எதிர்காலத்தில் அவை எய்தவுள்ள எழுச்சியைக் கற்பனை செய்தும் சில தேச பக்தியுள்ள—பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டில் ஈடுபாடு கொண்ட — புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாகவே முத்தொள்ளாயிரம் என்ற இலக்கியம் அமைகின்றது.

இவ்வகையிற் சோழ குலப்பெருமை பாடுவதாக அமைந்தவற்றுள் ஒன்றே மேற்குறித்த பாடலாகும்.

இப்பாடல் எழுந்த காலப்பகுதியிற் காஞ்சிபுரம் பல்லவவேந்தர் களது தலைநகராகவும் தஞ்சை முத்தரையர் களது தலைநகராகவும் திகழ்ந்தன சோழராட்சி பழையாறை, உறையூர் முதலிய சில நகரங்களுக்குள் கட்டுப்பட்டதாக ஒடுங்கியிருந்தது.

### புலிக்கொடி பறக்கும்

அந்நிலை மாற்றமடைந்து என்றோ ஒரு நாள் தஞ்சையும் காஞ்சியும் மீட்டெடுக்கப்பட்டுப் பண்டைப் பெருமை மிக்க சோழமண்டலம் (7 ஆம் பக்கம் பார்க்க)

## ஞான சஞ்சீவி

### நான்கு யோகமார்க்கங்கள்

இறைவனை உணர்வதற்கு நாலு யோக முறைகள் பிரதானமாகக் கூறப்படுகின்றன.

அவை கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம் எனப்படும்.

தன்னலம் கருதாத சேவை மூலம் இறைவனை உணரலாம் எல்லா ஜீவராசிகளும் வினையாற்றிக் கொண்டேயிருக்கின்றன. மனிதன் தனது பகுத்தறிவின் துணை கொண்டு, தனது சுயதர்மத்துக்கு ஏற்ப, நெறி தவறாது, தான் ஏற்றுக் கொண்ட கடமைகளைப் புரிந்து வருவானேயின் கடவுளுக்குச் சமீபமாக வந்து விடுகிறான்- இது கர்மயோகம்.

தன்னலம் கருதாத புண்ணியச் செயல்கள், தியாக உணர்வோடு செய்யும் சேவைகள், உலகத்தின் நன்மைக்கென்றே செய்யப்படும் செயல்கள், ஈஸ்வர ஆராதனையாக ஆற்றும் வினைகள், பாரமார்த்திகப் பெருநோக்கத்தோடு செய்யப்படும் கர்மங்களாகும்.

உலக வாழ்க்கையில் ஈடுபட்டாலும் எப்போதும் ஈசுவரனையே நினைத்துக் கொண்டு, எவ்வினையையும் தனக்கென்று செய்யாது இறைவனுக்காகவே செய்வது பக்தி யோகம்.

சாதகன் தன்னை இறைவன் கையிலுள்ள கருவி என்றெண்ணி வினையாற்றுவதால் சித்த சுத்தி உண்டாகி பக்குவமடைகிறான். கடவுள்

**அ. குமரகுரு**

பக்திக்கு மேலான ஆசைகள் எதுவும் அவன் மனதில் எழுவதில்லை

பக்த யோகி முழுமனதுடன் ஈசுவரனிடம் பொருந்திக் கொள்கிறான்.

பக்தியில் 'வைதிக பக்தி' என்றும் உண்டு. சாஸ்திரங்களில் கூறியபடி பகவந் நாமத்தை உச்சாடனம் பண்ணுதல், உபவாசம், தீர்த்த யாத்திரை, பூஜைகள் செய்தல். இவைகளை நெடுங்காலம் செய்து வர (7ஆம் பக்கம் பார்க்க)

# ஐந்து சமஷ்டி அமைப்புக்கள்; அவற்றுக்குப் பூரண சுயாட்சி

இலங்கை இனப்பிரச்சினை விஷயத்தில் இந்தியா ஏன் தனது தூதர்களை திடீர் திடீரென்று மாற்றுகின்றது?

மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஆர்ஜன்டீனாவுக்குப் பதில் இந்தியா முன்னுக்கு நின்று கொண்டு வரத் தவறியது ஏன்?

புதுடில்லி லோக சபைக் கூட்டத்தில் அகாலிதள் எம். பி திரு ப்லவந்த் சிங் ராமுவாலியா மேற்கண்ட கேள்விகளை எழுப்பினார்.

இலங்கைப் பிரச்சினை குறித்து இம் மாதம் 18 ஆம் திகதி லோக சபையில் சிறப்பு விவாதம் நடைபெற்றது அல்லவா? அப்போதே திரு. ராமுவாலியா மேற்கண்ட கேள்விகளை எழுப்பினார்.

திரு. ராமுவாலியா மேலும் சொன்னதாவது;

இலங்கையின் பொருளாதார முற்றுகை மனிதத் தன்மை அற்றது. தனது சொந்த மக்கள் மீதே நாகரிக அரசு ஒன்று இப்படித் தடைவிதிக்கலாமா?

இது விஷயத்தில் இந்திய அரசு உரிய விதத்தில் செயல்படாமல் இருப்பது கவலை தருகிறது.

### பண்டா செல்வா ஒப்பந்தம்

இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் காணப்படும் முன்னர் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஜெயவர்த்தன அரசு இலங்கையில் தமிழர் மீது நடத்தும் தாக்குதல் இனக்கொலையே; இலங்கைப் படைகளுக்கு பாகிஸ்தான், சீனா, இஸ்ரவேல் ஆகிய நாடுகள் உதவுகின்றன.

கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறி நடக்கும் போது இந்திய அரசு ஏன் மௌனமாக இருக்க வேண்டும்?

இலங்கை அடுத்த [illegible]மாக மாறி வருகின்றது.

இந்தியக் கரையில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில்தான் இலங்கை உள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கையை

> இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இந்திய லோக சபையில் ஒருநாள் சிறப்பு விவாதம் நடைபெற்றது அல்லவா!
>
> அந்த விவாதத்தில் சகல கட்சிகளையும் சேர்ந்த எம்பிக்கள் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகப் பேசினர்
>
> அதன் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது
>
> தொகுத்துத்தருபவர் : எஸ். ஜி.

5 சமஷ்டி அமைப்புக்களாக பிரிக்கவேண்டும். ஒவ்வொரு பிரிவுக்கும் பூரணசுயாட்சி வழங்க வேண்டும்.

இப்படித் திரு ராமுவாலியா சொன்னார்.

அ. இ. மு. க எம். பி திரு பி. குழந்தைவேலு பேசுகையில் சொன்னதாவது:-

இலங்கை விஷயத்தில் இந்திய அரசாங்கம் திருப்திகரமாகச்செயற்படவில்லை.

''தமிழர் மீதான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்; அல்லது இராணுவத் தலையீடு இடம் பெறும்'' — என்று இந்தியா, இலங்கையை எச்சரிக்க வேண்டும்.

அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் ஒரு தமிழன் கூட இலங்கையில் மிஞ்ச மாட்டான். இந்திய அரசு எதற்காக திரு. தினேஷ்சிங்கை சிறப்புத் தூதராக இலங்கைக்கு அனுப்பியது என்பது தெரியவில்லை.

இனப்பிரச்சினை மேலும் மோசம் அடைந்தால் தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத்தமிழ் அகதிகளின் எண்ணிக்கை

## பங்களாதேஷ் பாணியில் தீர்வு

2 லட்சத்தில் இருந்து 20 லட்சமாக அதிகரிக்கும்— என்று திரு குழந்தைவேலு தெரிவித்தார்.

### தமிழ்க் குழுக்களின் ஒற்றுமை

முன்னாள் வெளியுறவு அமைச்சர் பலிராம்பகத் பேசுகையில் சொன்னதாவது:- [illegible]

...னுவ நடவடிக்கைகளை நிறுத்திப் பொருளாதார முற்றுகையை விலக்க

### இந்திய எம். பிக்கள் நோக்கில் இலங்கை இனப்பிரச்சினை

வேண்டும்.

அரசியல் தீர்வு காணும் பேச்சுக்களை ஆரம்பிக்க டிசம்பர் 19 யோசனைகள் நல்லதொரு அடிப்படை.

தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு அமெரிக்கா பிரிட்டன், இஸ்ரவேல் நாடுகளின் கூலிப் படைகளை பயன்படுத்துவது கவலை தருகின்றது.

போராளித் தமிழ்க் குழுக்களை ஒற்றுமைப் படுத்துவது பெரும் கஷ்டமான காரியம் — இப்படி திரு. பகத் தெரிவித்தார்.

ஜனதா எம். பி திரு. [illegible] பேசுகையில் ''இனப்[illegible] தீர்வு காண ஒரு கால வரையறை விதிக்கவேண்டும். இலங்கையில் வன்செயல்கள் அதிகரிக்கின்றன'' என்றார்.

இந்திரா காங்கிரசைச் சேர்ந்த திரு பிபின் பால்தாஸ் சொன்னதாவது;-

ஈழம் கோரிக்கையை

## இந்தியா பார்த்திருக்க முடியாது

எதிர்க்கிறேன். ஆனால் தமிழர் கௌரவமாக வாழக்கூடிய தீர்வு ஒன்று இலங்கை அரசமைப்புக்குள் காணப்படவேண்டும்.

தெலுங்கு தேசம் கட்சி எம் பி திரு. எம். சுப்ப ரெட்டி பேசுகையில், 'தக்க தருணத்தில் தக்க நடவடிக்கையை இந்தியா எடுக்கவேண்டும். தவறினால் இலங்கை நோய், இந்தியர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் பரவ ஆரம்பித்து விடும்' என்றார்.

### ஜே. ஆரின் உண்மை உருவம்

இந்திரா காங்கிரஸ் எம் பி திரு சுரேந்திர பால்சிங் சொன்னதாவது;-

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் உண்மை உருவத்தை உலக அரங்கில் இந்தியா வெளிப்படுத்த வேண்டும்

சர்வதேசக் கும்பலின் கையில் திரு. ஜெயவர்த்தன இன்று சிக்கி உள்ளார் —என்றார்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம் பி திரு சுதிர்ரோய் பேசுகையில், 'இலங்கை நடத்தும் இனக்கொலை பற்றி இந்தியா உலக அரங்கில் எடுத்துச்சொல்ல வேண்டும். இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தமிழருக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.' என்றார்.

அஸாம் கணபரிஷத் கட்சி எம் பி திரு தினேஷ் கோஸ்வாமி சொன்னதாவது;

இலங்கை அரசு இராணுவ நடவடிக்கை எடுப்பதை நாம் எதிர்க்கின்றோம்

அப்படி இராணுவ நடவடிக்கையை இலங்கை தொடருமானால் இந்தியா பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

சார்க், அணிசேரா இயக்கம் ஆகிய அமைப்புக்களின் வருங்காலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுவதில் ஏற்படும் வெற்றி தோல்வியில்தான் தங்கி உள்ளது —என்றார்.

தி மு க எம் பி திரு. என் வி சோமு பேசுகையில் சொன்னதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு பங்களாதேஷ் பாணியில்தான் இந்தியா தீர்வுகாண முன்வர வேண்டும்.

கடந்த இரண்டு மாதங்களாக யாழ் குடாத் தமிழர் பொருளாதார முற்றுகையினால் துன்பம் அடைந்து வருகின்றனர்.

இந்தியா தனது பொறுத்து இருந்தும் (7 ஆம் பக்கம் பார்க்க)



ஒருவர்:- ஷெல் விழுகிற இடத்தை செல்வந்த இடமென்று சொல்லுறது சரிதான்.
மற்றவர்:- ஏன்?
ஒருவர்:- பின்னை பெண்ணை விடிஞ்சால் சனமெல்லாம் செல் விழுற இடத்தை நாடித் தான் போகுதுகள். ✱



ஒருவன்:- யாழ்ப்பாணம் என்று ஏன் அழைக்கின்றார்கள்?
மற்றவன்:- கிட்டத்தட்ட யாழைப்போல வடிவிலான ஹெலியிலிருந்து 'பாணம்' விடுவதால் அப்படி அழைக்கிறார்கள்! ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மக்களால் உவாந்திக்கப்பட்டவரை சென்னை வாசிகள் உவந்து உபசரித்தனரா?

நாவலர் அவர்கள் திருக்கோவையார், திருக்குறள், தர்க்க சங்கிரகம் முதலிய நூல்களை இராமநாதபுரம் பொன்னுச்சாமி தேவர் வேண்டுகோளுக்கு இணங்கி ஆராய்ந்து பதித்த 1860, 1861 ஆம் ஆண்டுக் காலத்தில் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் படித்தவர்கள் பூவாளூர்த் தியாகராசச் செட்டியார், அரன்வாயில் வேங்கடசுப்பப்பிள்ளை, திருவிழிமிழலைச்சாமி நாதக்கவிராயர் முதலானோராவர். பின்னர் மயூரத்தில் தங்கி வல்லம் கந்தசாமிப்பிள்ளை, மயூரம் முத்துச்சாமிப்பிள்ளை, சிதம்பரம் நமசிவாயபிள்ளை, திருப்பாம்புரம் சாமிநாதபிள்ளை முதலானோர் கற்று வந்தார்கள்.

அந்தக்காலத்தில் திருவாவடுதுறையாதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் மகா சந்நிதானமாயிருந்தார். அவரின் கீழ் கலாநிதோதர் சுப்பிரமணிய தேசிகர் இரண்டாம் பட்டத்தில் இருந்தார் சுப்பிரமணிய தேசிகரின் பூர்வாசிரம ஆசிரியராயிருந்தவர் தாண்டவராய சுவாமிகள். தாண்டவராயசுவாமிகள் பொன்னுச்சாமி தேவரை நன்கறிந்தவர். ஆறுமுக நாவலரையும் நன்கறிந்தவர்.

பதினொரு ஆண்டுகளுக்கு முன் 1849இல் நல்லூர் கந்தப்பிள்ளை ஆறுமுகம் நாவலரானது தாண்டவராய சுவாமிகள் முயற்சியாலேயே தான். அவர் சின்னப் பட்டத்துக்கு ஆலோசனை கூற, சின்னப்பட்டம் பெரியபட்டத்துக்கு விண்ணப்பஞ் செய்ய, பட்டமளிப்பும் பாராட்டுவிழாவும் கோலாகலமாக நடைபெற்றன.

அக்காலத்தில் ஐயரவர்களும் இராமசாமிப் பிள்ளையும் பிறக்கவில்லை.

தாண்டவராய சுவாமிகள் ஆலோசனையின் வண்ணம் சுப்பிரமணிய தேசிகர் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களை மடத்துக்கு அழைத்துத் தவசிப்பிள்ளைகளுக்குப்பாடம் சொல்ல வைத்தார் இவ்வாறு நாவலரின் பதிப்புகளுக்கும் தாண்டவராய சுவாமிகள் சிறப்புப்பாயிரம் கொடுத்த வகையில் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தியாகராசச் செட்டியார், சுப்பராயச் செட்டியார், முதலானோர் பொன்னுச்சாமி தேவரைத் திருப்திப் படுத்துவதற்காகவும் தங்கள் பெருந்தன்மையினு லும் சிறப்புப்பாயிரங்கள் பாடினார்கள் இது நிற்க.

கலம்பகம் அரங்கேற்றம்

இத்தகைய புனிதப் பணிக்கு ஐயரவர்கள் இராமசாமிப்பிள்ளை என்பாரைப் புரோக்கர் வேலையில் ஈடுபடுத்தித் தம் கற்பனை சக்தியைச் சஞ்சாரம் செய்யவிட்டுள்ளார்.

நாவலரவர்களின்பதிப்பு வேலைகள் நிறைவேறிய அவர்களின் கையால் இராமசாமிப்பிள்ளையையும், வன்றொண்டச் செட்டியாரையும், நமச்சிவாயத்தம்பிரானையும் அறிந்தார், பாடஞ் சொல்லிக் கொடுத்தார் இவ்வாறு 1864 ஆம் ஆண்டுக்குப்பின் படிக்க வந்த இராமசாமிப் பிள்ளையை, நாவலர் அவர்களோடு உரையாடிப் பழகியவர் என்று இருமடங்கு பொய்



பின்னர் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானம் ஆம் பலவாண தேசிகபரமாசாரியர் மீது கலம்பகம் என்னும் பிரபந்தம் பாடி அரங்கேற்றினார். அதன் சிறப்பு நோக்கி அவருக்கு ஆதீனத்தில் மகாவித்துவான் என்னும் பட்டம் கிடைத்தது.

அதற்குப்பின், 1864 ஆம் ஆண்டிலேதான் நாவலர் அவர்கள் ஐயர் கலந்து எழுதிய ஐயர் அவர்கள், மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களை முதலிற் கண்டது 1871 ஆம் ஆண்டிலேயேயாம்.

உவாந்தியும் உவகையும்

"யாழ்ப்பாணத்தாரால் உவாந்திக்கப்பட்ட என்னை இச் சென்னை வாசிகள் உவந்தேற்று உபசரித்து" என்றெல்லாம் நாவலரவர்கள் தமது தலைமாணாக்கருக்குக் கடிதமெழுதிய சந்தர்ப்பத்தைத் தலைமாணாக்கரான மைத்தர் த. கைலாசபிள்ளை அவர்கள் நன்கறிந்து தமது மாணாக்கர் பண்டிதமணி அவர்களுக்குத் தாடனப் படுத்தியிருந்தார்.

எனவே தான் ஐயரவர்களின் இருட்டடிப்புக் களைப் பண்டிதமணி அவர்கள் வெகுவாக விசாரித்தார். சந்திர சூரியர்களுக்கு உண்டாகின்ற கிரகணம் சில நிமிட நேரத்தில் நீங்கி விடுகிறது ஐயரவர்களின் இருட்டடிப்பு பெரியது.

பாரம்பரியமான இரங்கற்பா

இரங்கற்பா என்பது தமிழிலக்கிய வரலாற்றிலே சங்க காலத்திலேயே எழுந்ததாகும் பாரி மகளிர் தந்தையையும் மலைநாட்டையும் இழந்த நிலையில் இரங்கிப்பாடிய பாடல் "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" எனத் தொடங்குவதாகும்.

சங்ககாலப் புலவர்களுள் பெரியவர்களுள் ஒருவரான கபிலர் புலனழுக்கற்றவர் எனப் பெரிதும் போற்றப் பெற்றவர். அவர் மறைந்த பின் ஒருவர் "கபிலன் இன்றிருந்தால்" எனப் பொருள் தரும் வகையில் இரங்கிப் பாடியுள்ளார்.

ஆங்கிலத்திலும் கையறு நிலைப்பாடல்கள் மெத்தவுண்டு பெரும் புலவர் மில்ரன் என்பார் தமது சகபாடி மாணாக்கன் எட்வேட்கிங் என்பார் கப்பலுடைந்து அகாலமரணமடைந்த போது இரங்கிப் பாடிய லிசிடாஸ் என்னும் பாடல் அஞ்சலிக்கவியாகும்.

இத்தகைய பாடல்கள் கிரேக்க, லத்தீன்மொழிகளிலேயும் மருதநில வாழ்வில் அமைந்துள்ளன. வேர்ஜில் முதலான புலவர்களின் பாடல்கள் இவ்வண்ணத்தவையாகும். இரங்கற் பாடலிற் பெரும்புகழ் பெற்ற மில்ரன் மறைந்த பின் வேறொரு புலவர் ஆராமை மீதூர 'மில்ரன்! நீ இன்றிருந்தல் வேண்டும்' எனப் பாடு வர்.

இங்ஙனமே தோமாஸ் கிறே என்பார் நாட்டுப்புறத்து இடோட்டில் சிவசமாதியுற்ற பெரியவர்களை நினைந்துருகி நைந்து பாடியுள்ளார். அல்பிரெட் லோட்ரெனிசன் என்பார் விரத்தனபதி வெலிங்ரன் கோமகன் மீது பாடிய இம்மெ மோதியம் மிக அருமையாக அமைந்தது.

இனி இரங்கற்பாவகையில் ஆறுமுகநாவலர் அவர்களை தமது உத்தம மாணாக்கன் சுப்பிரமணியபிள்ளையின் அகால மரணங்குறித்து மனமுடைந்து பாடியுள்ளார்.

அன்று அச்சிறுவனின் வரலாற்றையும் அருமையாக எழுதியுள்ளார்.

அக்கினிக்கு ஆகுதி

அந்த வரலாறு அக்கினி பகவானுக்கு ஆகுதி செய்யப்பட்ட சம்பவம் கவலைக்குரியதாகும். அவர் பாடிய இரங்கற் பாக்கள் 'என்னுடைய கண்மணியே எனதன்பர் சிாமணியே பின்னமுறு புகழ்பொலி சுப்பிரமணிய பெருந்தகை நீ என்னையுலக சுக்கை பிதா வினிய குருவென்று முன்னர்ச் சொன்ன தெல்லை பின்னரென் னைத் துறந்ததென்ன சொல்வாயே' எனத் தொடங்கி, 'நின்றன் புண்டரமுகமும் நின்னுறநன்கை முகமும் நின் றணிந்த கவினுடையும் நின்கை புதைத்திடு வாயும் நின்றஞ்சுக இருநிலையும் நின்பணிந்த வின்மொழியும் என்ற னெதிர்னி பெற்றா செய்திடவான் பெறுவேனே' என முடியும் பதினொரு பாடல்களைக் கொண்டதாகும்.

கங்கையில் விடுத்த ஓலை

இனி பண்டிதமணி அவர்களின் சமகாலத்தவரும் பெரும் பேராசிரியரும் வித்தகருமான விபுலானந்த அடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதற் பேராசிரியராயிருந்த போது விரிவுரையாளராயும் நெருங்கிய நண்பராயும் இருந்தவர், சந்தசாமி என்னும் பெருங் குணம்படைத்த தமிழறிஞர். அடிகளார் இமய மலைச்சாரலில் தபோவனத்தில் தங்கியிருந்த காலத்தில், தமிழகத்தில் சந்தசாமிப் பெரியோன் மாரடைப்பால் மாண்ட செய்திகேட்ட அடிக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அற்பர்களுக்கு உதவி செய்வது ஆபத்தானது

ஒரு காட்டில் வாழ்ந்து வந்த ஓநாய் ஒரு நாள் வனவிலங்கு ஒன்றை அடித்துக் கொன்றது.

அந்த விலங்கை ஓநாய் ஆவலோடும் அவசரத்துடனும் உண்டதால் ஒரு பெரிய எலும்பு அதன் தொண்டைக்குள் மாட்டிக் கொண்டு விட்டது.

தொண்டையில் மாட்டிக்கொண்ட எலும்பை வெளியே எடுக்க ஓநாய் பல முயற்சிகளைச் செய்தும் பலன் கிடைக்கவில்லை.

எலும்பு தொண்டைக்குள் குத்திக் குத்தி அதிக வேதனையை உண்டாக்கியது.

கண்முன் தென்பட்ட மிருகங்கள் எல்லாவற்றையும் பார்த்து "நண்பர்களே! என் தொண்டையில் மாட்டிக் கொண்ட எலும்பைத் தயவு செய்து எடுத்து விடுங்கள். நான் விலை உயர்ந்த பரிசைத் தருகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டது.

"துஷ்டனான உனக்கு உதவி செய்தால் எமக்குத் தீமைதான் வரும் அதனால் நாம் உதவி செய்ய மாட்டோம்" என சகல மிருகங்களும் தமது வழியில் சென்றன.

கடைசியாக ஒரு நாரை ஒரு குளத்தில் நின்று மீனைப் பிடித்துத் தின்று கொண்டிருப்பதை ஓநாய் கண்டது.

நாரையை நெருங்கி "ஆருயிர் நண்பர் நாரையாரே! உன்னைப் பணிவுடன் வணங்குகின்றேன் என் தொண்டையில் ஒரு பெரிய எலும்பு மாட்டிக் கொண்டு விட்டது. தயவு செய்து அதனை எடுத்து எனக்கு உதவி செய். நான் உனக்கு விலை மதிப்புள்ள உயர்ந்த பொருள் ஒன்றைப் பரிசாகத் தருகின்றேன்" என்று ஓநாய் கூறியது.

நாரை சற்று இரக்க குணம் படைத்ததாக இருந்தது. அத்துடன் ஓநாய் உயர்ந்த பரிசும் தருவதாகத் தெரிவித்த படியால் அதற்கு உதவி செய்யத் தீர்மானித்தது நாரை தன் நீளமான அலகை ஓநாயின் வாய் வழியாக அதன் தொண்டைக்குள் செலுத்தி உள்ளே சிக்கிக் கொண்ட எலும்பை மிகவும் ஜாக்கிரதையாக வெளியே எடுத்து விட்டது

ஆனால் ஓநாயோ நாரைக்கு நன்றி கூடச் சொல்லவும் இல்லை சிறு பரிசும் வழங்கவில்லை தன் வழியே போகத் தொடங்கியது

"என்ன ஓநாயாரே! ஏதோ பரிசு கொடுப்பதாகக் கூறினீர் ஒன்றுமே தராமல் போகிறீரே" என நாரை கேட்டது.

ஓநாய் கோபத்துடன் நாரையை நோக்கி "மதிகெட்ட நாரையே வாயை மூடு. என் வாய்க்குள் உன் தலையை விட்டிருந்தபோது உன்னைக் கடிக்காமல் விட்டேனே... இதைவிட உனக்கு வேறு பரிசு வேண்டுமா? மரியாதையாக இந்த இடத்தை விட்டு ஓடிவிடு இல்லாவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன்" என மிரட்டியது.

உயிர் பிழைத்தால் போதும் என நாரை அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

அற்பர்களுக்கு உதவி செய்தால் ஆபத்து வரலாம் என்பதற்கு இக்கதை உதாரணமாகின்றது ✶

ஈசாப் நீதிக்கதைகள் அனேக உலகிலும் சிறுவர்களால் விரும்பிப் படிக்கப்படுபவை... இனிமையானவை...

அதே வேளையில் பல அரிய கருத்துக்களை மனதில் பதிக்கவும் நல்ல நெறிகளை கடைப்பிடிக்க வழி வகுக்கவும் பெரிதும் உதவுபவை!

ஈசாப் நீதிக்கதைகளின் சிறப்புக் கருதியும் எமது சிறுவர், சிட்டு வாசகர்களின் விருப்பம் கருதியும் அடிக்கடி இப்பகுதியில் வெளியிட முடிவு செய்துள்ளோம் என்பது உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

ஈசாப் நீதிக்கதை




### நன்றியுள்ள நாய்க்குட்டி

நான் வளர்க்கும் நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி
நாலு கால் பாய்ச்சலில் – என்னை
நாடி ஓடி வந்திடும்.

காவல் காக்கும் வீரனும்
காதும் ரொம்பக் கூர்மையாம்
ஆவல் கொண்டு தானுமே
அதனை அணைத்துக் கொள்ளுவேன்.

'வள் வள்' என்றே குரைக்குமாம்
வாலை ஆட்டிக் குழையுமாம்
கள்வன் வந்த போதிலே
கடித்துக் குதறி எடுக்குமே

நண்பனாக அதையுமே–நாங்கள்
எண்ணிக் கொள்ளுவோம்
அன்பனாக அதுவுமே
எமக்குச் சேவை செய்யுமே.

-செல்வி. வ. கௌசி
யாழ். இந்துமகளிர் கல்லூரி.

## வான்வெளியில் நீந்தும் வால் வெள்ளிகள்

வால் நட்சத்திரங்கள் வானமண்டலத்தில் எப்போதும் காணப்படுவதில்லை. எனினும், சில சமயங்களில் அவை பிரகாசமான வால் போன்ற தோற்றத்துடன் திடீரென வானத்தில் காட்சிதரும்.

பல வால் நட்சத்திரங்களைத் தூரதரிசினியின் மூலமே நாம் பார்க்க முடியும். ஆனால் சில வற்றைத் தூரதரிசினியின் உதவியில்லாமலே பார்க்கலாம்.

ஹாலி

1910ஆம் ஆண்டு மே மாதம் காணப்பட்ட ஹாலியின் வால் நட்சத்திரம் மிகவும் பெரியது. ஹாலி என்ற வான சாஸ்திரி கண்டுபிடித்ததனால் இது அவர் பெயரால் வழங்குகிறது.

இது சூரியனை ஒருமுறை சுற்றிவர சுமார் 75 ஆண்டுகளாகின்றன. மீண்டும் இந்த வால் நட்சத்திரம் 1986 ஆம் ஆண்டு காணப்படும் என்று கணக்கிட்டார்கள். அவ்வாறே 1986ஆம் ஆண்டில் அவ்வால் வெள்ளி தோன்றி மறைந்தது.

பிரமிப்பும் ஏமாற்றமும்

1910 ஆம் ஆண்டில் இவ்வால்வெள்ளி தோன்றியபோது மிகவும் பிரமிப்பூட்டுவதாக வானில் மூன்றில் ஒரு பகுதி நீளத்துடன் தோன்றி பரபரப்பை உண்டாக்கியது எனவே போன ஆண்டு அதன் வரவை எல்லாநாட்டு மக்களும் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்தனர். ஆனால் எதிர்பார்த்தளவு காட்சி அளிக்காததால் மிகவும் ஏமாற்றம் அடைந்தனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக குறைந்தது முப்பது தரம் தோன்றியுள்ள - ஹாலியின் வால்வெள்ளி கடந்த ஆண்டு மங்கலாகக் காட்சி அளித்தது.

1966 ஆம் ஆண்டிலே மிகவும் பெரியதாகவும், மிகவும் பிரகாசமாகவும் எல்லோரும் பிரமிக்கக் கூடிய உருவத்துடனும் தோன்றிற்று

1985 ஆம் ஆண்டில் ஐப்பசி மாதமளவில் இடபராசியில் தோன்றிய இவ்வால்வெள்ளி சிறிது சிறிதாக சூரியனை நோக்கிச் சென்று பெப்ரவரி 9ம் திகதி மகரராசியிற் சூரிய அண்மை நிலையை அடைந்தது.

பின் சூரியனை விட்டுத் திரும்பிவந்து! சென்ற ஆண்டு தனுசு ராசியில் காணக்கூடியதாக இருந்தது. இவ்வால் வெள்ளி இருதினங்களுக்குப் பின் விருச்சிகத்துட்பிரவேசித்தது. ஏப்ரல் 11 ஆம் திகதி இது பூமிக்கு மிக அண்மையில் இருந்தது. அதன்பின் இது மிக விரைவாகச் சென்று ஏப்ரல் 20 ஆம் திகதி ஹைட்ரா என்னும் உடுத்தொகுதிக்குச் சென்று மறைந்துவிட்டது.

மூன்று பகுதிகள்

வால்வெள்ளியில் மூன்று பகுதிகள் உள்ளன. முதலாவது கரு அதனைச்சுற்றி கோமா உள்ளது. சூரியனை அணுகும்போது இதற்கு ஒரு வால் உண்டாகும். கருவானது ஒருசில கிலோமீற்றர் விட்டத்தை உடையதென்றே விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இது கோமாவுக்குள் மறைந்து கிடக்கின்றது.

கோமாவை ஊடுருவிச் சென்று இதனை ஆராய்வதற்கு ஐரோப்பிய விண்வெளி ஜியோட்டோ என்னும் கலம் அனுப்பப்பட்டது அனுப்பும்போது இது திரும்பி வருமென்று எதிர்பார்க்கப்படவில்லை. இது சில நாட்களின் பின் செயலிழந்தது என அறிவி

(6 ஆம் பக்கம் பார்க்க)

சி. க. ஆதித்தன்
(10 ஆம் ஆண்டு) யாழ் / இந்துக்கல்லூரி

## இந்தியாவில் ஒரு சிதை இலங்கையில் இரண்டு..

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியார் துறவுபூண்டு எண்பதாவது நிறைவு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

அதில் பல இலங்கைத் தமிழரும் கலந்திருந்தனர்

ஜகத்குரு தமது அனுகூரை வழங்குகையில் இந்தியாவில் ஒரே ஒரு சிதை மட்டும் இருந்தான். அவன் கற்பு, சதை, இரத்தம் போன்ற பல அரிய குணங்களைக் கொண்டிருந்தான். அதேபோலவே இலங்கையில் இருவர் இருந்தனர் என்றுவிட்டு சபையைப் பார்த்தார்.

...சிறிதுநேரம் மௌனம் நிலவியது

பின்னர் அவரே தொடர்ந்தார் ஒருத்தி மண்டோதரி. மற்றவர் திரிசடை. இவர்கள் இருவரும் நல்ல குணசிகளைப் பெற்றுத் திகழ்ந்தவர்கள் என்றார். ✶

## 'மதர்லாண்ட்' சிலை

அமெரிக்காவிற்கு லிபர்டி சிலை எப்படியோ அது போன்றதே ரஷ்யாவில் அமைக்கப்பட்டிருக்கும் மதர்லாண்ட் சிலை.

ரஷ்ய வீரர்களின் தியாகத்திற்கும் தன்மான உணர்வுக்கும் நினைவுச் சின்னமாக எழுப்பப்பட்டிருக்கும் இந்த வீரத்தாய் சிலை, வால்கோ கிரேட் பகுதியில் மாமியோவ் என்ற குன்றின் மீது 252 அடி உயரத்தில் கம்பீரமாக நிற்கிறது

எவ்ஜேனிவுச் செதிச் என்ற புகழ்பெற்ற சிற்பியால் பல பிரபல ரஷ்யச் சிற்பிகளின் உதவியுடன் உருவாக்கப்பட்ட கலை நுட்பம் மிக்க சிலை இது.

ரஷ்யாவுக்குச் செல்லும் வெளிநாட்டுப் பயணிகள் இந்தப் பிரமாண்டமான வீர அன்னையின் சிலையைப் பாராமல் திரும்புவது அபூர்வம். ✶

# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

### பறவையா? மிருகமா?

பறப்பவையெல்லாம் பறவை என்று சொல்ல முடியாது அணில்களில் பறக்கும் அணில்களுடன் இருக்கின்றன. இவற்றைப் பறவை வர்க்கத்தில் சேர்க்கமுடியுமா?

குட்டி போட்டுப் பாலூட்டுபவையெல்லாம் மிருக இனம் என்றும் சொல்லமுடியாது. வௌவால் குட்டி ஈன்று பால் புகட்டுகிறது. அதை மிருகம் என்று சொல்லமுடியுமா? ✶

### காரின் வேகம்

கார்கள் மிக அதி வேகத்தில் செல்ல அனுமதிக்கப்பட்ட நாடு இன்று மேற்கு ஜெர்மனி தான். இங்கு ஒருவர் மணிக்கு 240 கிலோ மீட்டர் வேகத்தில் தாராளமாகக் கார் ஓட்டலாம். ✶

### வீட்டினுள் நுழைவது எப்பவும் யன்னலால்

எல்லோரும் வாசல் வழியாகத்தான் வீட்டுக்குள் நுழைவார்கள். ஆனால் லண்டனைச் சார்ந்த ஜோ ஜன்னல் வழியாகத்தான் தன் வீட்டுக்குள் நுழைவார். காரணம், இவர் எப்போதும் 19 அடி உயரமுள்ள இரு கம்புகளைக் கால்களில் கட்டிக் கொண்டு தான் நடப்பாராம் எங்கே சென்றாலும் காலில் கம்புகள் இல்லாமல் இவர் செல்லமாட்டார்.

ஆரம்ப காலங்களில் கீழே விழுந்ததால் இவருடைய கால்கள் ஐந்து முறைகள் ஒடிந்து விட்டன இரண்டு முறைகள் இவருடைய இடுப்பு எலும்புகளும் [illegible] எலும்புகளும் உடைந்திருக்கின்றன.

இருந்தாலும் கம்புகள் இல்லாமல் ஜோ வெளியே செல்வதில்லை. ✶

### நத்தை வேகம்

ஆகக் குறைந்த வேகத்தைக் குறிப்பதற்கு நத்தையைச் சொல்வதுண்டு.

அப்படியானால் நத்தையின் வேகம் என்ன?

ஒரு மணிக்கு நத்தை செல்லும் வேகம் 23 அங்குலம். என்ன வியப்பாக இருக்கின்றதா? இது உண்மை; கற்பனையல்ல. ✶

### நீண்டகாலப் பிரதமர்

உலகிலேயே அதிக காலம் பிரதமராகப்பதவி வகித்தவர் போர்த்துக்கல் நாட்டின் சர்வாதிகாரப்பிரதமராக இருந்த சலஜார் என்பவர். இவர் தொடர்ந்து 36 ஆண்டுகள் பிரதமராகவே இருந்தார். பிரதமராகவே காலமானார். ✶

### வேதனையிலும் சாதனை...

சோவியத்தில் பிறந்த ஜோஹன்னஸ் ரெக்லிக் என்பவர் ஓர் உலக சாதனையை 1962 ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார்.

தேனீக்கள் 2443 தரம் தன்மீது கொட்டுவதை இவர் பொறுமையுடன் தாங்கியிருக்கிறார்.

பொறுமைக்கு ஒரு நோபல் பரிசு இவருக்குக் கொடுக்கலாமல்லவா? ✶

### பதறிப்போன கிழவி

ஆஸ்திரேலியாவில் ஓர் இளம் பெண் டோனி விண்டர் என்பவனிடம் ஏமாந்து போனாள். கர்ப்பமுற்றாள்.

உடனே தன்னைத் தாயாக்கியவனிடம் ஜீவனாம்சம் வாங்க அவன் விலாசத்தைத் தேடினாள். தொலைபேசிப் புத்தகத்தில் இருந்த டோனி விண்டர் என்ற பெயருள்ள விலாசத்திற்குக் கோர்ட்டு மூலம் சம்மன் அனுப்பினாள்.

உண்மையில் அந்தப் பெயரில் அந்த வீட்டில் வசித்தவள் ஒரு கிழவி. நீதிமன்ற சம்மனை ஏதோ விளையாட்டு என எண்ணி அவள் அடுப்பில் தூக்கிப் போட்டு விட்டாள்.

வழக்கு நடந்தது. சம்மன் அனுப்பப்பட்டவர் வராததால் அந்தப்பெண்ணுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு டோனி விண்டர் மாதா மாதம் 1000 பவுன் அந்தப்பெண்ணுக்கு அனுப்ப வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பு கிடைத்தவுடன் டோனி விண்டர் என்ற அந்தக் கிழவி பதறிப்போய் அலறிக் கொண்டு நீதி மன்றத்திற்கு வந்து தான் அந்தச் செயலைச் செய்யவில்லை என்பதை நிரூபித்தாள்! ✶

### நான்குவகை மனிதர்கள்

மனிதர்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை கடைநிலை மனிதன், இடைநிலைமனிதன், முதல்நிலைமனிதன், உத்தமநிலைமனிதன்.

கடைநிலை மனிதன்! எனதும் உனதும் எனது என்பான்.

இடைநிலை மனிதன் எனது எனது; உனது உனது! என்பான்.

முதல்நிலை மனிதன்! எனதும் உனது; உனதும் உனது! என்பான்.

உத்தம நிலை மனிதன்; எனது எனதல்ல உனதும் உனதல்ல எல்லாம் பொதுவானது என்பான். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் நுழையா இடத்தில் நெய் நுழையும்
## நெய் நுழையா இடத்தில் புகை நுழையும்

'நாலடி இரண்டடி கற்றவனிடத்தே வாயடி கையடி அடிக்காதே'

திருக்குறளோடு மதித்துரைக்கும் தகுதிப்பாடுடைய நூலாக நாலடியார் போற்றப்படுகிறது. திருவள்ளுவரால் குறள் வெண்பாக்களால் செய்யப்பட்ட முப்பால் நூல் 'குறள்' என்ற பெயர் பெற்றது போல் சமண முனிவர்களால் நாலடிகளைக் கொண்ட வெண்பாக்களால் செய்யப்பட்ட இந்நூல் 'நாலடி' என்ற பெயர் பெற்றது. சிறப்பு விகுதியாகிய 'ஆர்' பெற்று நாலடியார் என வழங்கலாயிற்று. திருக்கோவையார், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்ற நூல்களின் பெயர்களைப்போல இதுவும் கொள்ளப்படும். இந்நூலுக்கு 'நாலடி நானூறு' என்ற மற்றொரு சிறப்புப் பெயரும் வழங்கி வருகின்றது.

### நாலடியார் காலம்

நாலடியார் கடைச்சங்க காலத்து நூல் என்பதனை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைத் தொகுத்துக் கூறும் 'நாலடியார் நான்மணி நானாற்பது ஐந்திணை' எனத் தொடங்கும் வெண்பாவில் முதலில் இந்நூல் கூறப்பட்டிருந்ததிலிருந்து அறியலாம்.

கடைச் சங்ககாலம் கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டளவில் முடிவடைந்தால் இந்நூல் இட்டத்தட்ட ஆயிரத்தியெண்ணூறு வருடங்களுக்கு முற்பட்டது எனக்கருதலாம். நாலடியாரில் பெருமுத்தரையர் என்ற வள்ளலைப் பற்றி இரண்டு வெண்பாக்களில் கூறப்பட்டிருந்ததால் இந்நூல் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனச் சிலர் கூறுவர்.

எனினும் நூல் ஆராய்ச்சியாளர்கள் இந்நூலின் சொற்பிரயோகங்கள் நடை என்பனவற்றை அடிப்படையாக வைத்து கடைச்சங்க நூலென்றே பொதுவாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

### இதயத்தை நிரப்பும் நல்ல தமிழ் நாலடியார்

சங்கமருவிய காலத்தில் சமண சமயம் செல்வாக்கடைந்து தமிழ் நாட்டரசர்களாலும் ஆதரிக்கப்பட்டுவந்தது. சமணர்கள் குடியேறிய நாடுகளில்' பஞ்சம் ஏற்பட்டபோது அவர்கள் தமது நாட்டைவிட்டு வெளியேறி தம்மை ஆதரிக்கக்கூடியவன் பாண்டிய மன்னன் என உணர்ந்து பாண்டி நாட்டை அடைந்தனர்.

இவர்கள் தமிழிலும் வடமொழியிலும் பாண்டித்தியமுடையவர்களாக இருக்கக்கண்டு அவர்களைத் தமது சபையிலிருக்கச் செய்தான். நாட்கள் சென்றபின் அவர்கள் வாழ்ந்த நாடுகளில் பஞ்சம் நீங்கிச் செழிப்புண்டாகியபோது தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல விருப்பமுற்று தமது கருத்தினைப் பாண்டிய மன்னனுக்கு தெரிவித்தனர். மன்னன் அவர்களைப் பிரியமனமில்லாமல் விடையளித்திலன்.

பாண்டியனிடம் சொல்லாமலே போய்விட முடிவுசெய்த சமண முனிவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவைப் பாடித் தமது பீடத்தின் கீழ்வைத்துவிட்டு ஒருவருமறியாது தங்கள் நாடுகளுக்குச் சென்றுவிட்டனர்; மறுநாள் மன்னன் இவர்களைக்காணாது மனம் வருந்தி அவர்கள் இருந்த தவிசுகளை அப்புறப்படுத்தியபோது அம் முனிவர்களால் எழுதப்பட்ட ஏடுகள் அகப்பட்டன.

### ஏடுகளின் எதிர் நீச்சல்

பாண்டியன் அவர்களைப் பிரிந்த வருத்தத்தால் அவற்றை வைகையாற்றில் எறியும்படி பணியாளருக்குக் கட்டளையிட்டான். எறியப்பட்ட ஏடுகளில் நானூறு ஏடுகள் ஆற்றின் வழிச் செல்லாது எதிரேறி வந்தன. அவற்றின் மகிமையையும் தெய்வத்தன்மையையும் பாண்டியன் கண்டு வியந்து அவற்றை எடுத்துச் சேர்த்து நூலாக அமைத்து அந்நூலுக்கு 'நாலடியார்' எனப் பெயர் சூட்டினன்.

இவ்வரலாற்றின் பெருமையை 'மன்னன் வழுதியர் கோன் வையைப் பேராற்றில் எண்ணியிரு நான் கோடாயிரவர் — உன்னி எழுநியிருமெட்டிலே இரே நடந்த பழுதிலா நாலடியைப் பார்' என்ற தனிச் செய்யுள் மூலம் அறியலாம்.

இந்நூல் நானூறு பாடல்களையுடையது என்பதை 'நானூறும் வேதமா நானூறு நானூறுங் கற்றற்கு நற்றுணையா' என்ற பாடலடி விளக்கும்.

### நாலும் இரண்டும்

நாலடியார் அசிய சொற்பிரயோகங்களையுடையதென்பதையும் திருக்குறளோடு ஒப்புவமையுடையதென்பதும் பின்வரும் வாக்கியத் தொடர்களால் அறியப்படும். 'பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்' 'நாலடி இரண்டடி கற்றவனிடத்தே வாயடி கையடி அடிக்காதே' 'பாலும் நெய்யும் உடலுக்குறுதி வேலும் வாலும் மடலுக்குறுதி ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி' போன்ற அடிகள் நல்ல உதாரணங்களாகும்.

சங்க நூல்களுக்கு உரையாசிரியர்களான பரிமேலழகர் இளம்பூரணர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோரும் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லாரும் இந்நூலிலிருந்து சில பாக்களை மேற்கோள் காட்டுகின்றனர்.

நாலடியாரில் பல இடங்களில் திருக்குறளுக்கு விளக்கமளிப்பது போல் பாடல்கள் உள்ளன. 'யாகாவாராயினும் நாகாக்க' என்ற திருக்குறட் கருத்தை நாலடியார் பின்வருமாறு விளக்கும். 'காவாது ஒருவன் தன் வாய் திறந்து சொல்லுஞ் சொல் ஓவாதே தன்னைச் சுடுதலால் — ஓவாதே ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும் காய்ந்தமைந்த சொல்லார் கருத்து'

### மூன்று நிலையாமைகள்

சில இடங்களில் திருக்குறள் போலல்லாது செல்வ நிலையாமை இளமை நிலையாமை யாக்கை நிலையாமையில் தொடங்கி பிறகே அறன் வலியுறுத்துகிறது. 'துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப் பகடு நடந்த கூழ் பல்லாரோடுண்க அகடுறயார் மாட்டும் நில்லாது செல்வம் சகடக்கால் போல வரும்' என்ற செய்யுள் நிலையாமையை விளக்கும்.

செத்தாரைச் சாவார் சுமக்கும் இவ்வுலகில் நிலையாத இப்பதவை நிலையாகக் கருதி மக்கள் மதிமயங்கக் கண்டு உளம் கலங்குவதாகப் பாடல்கள் நாலடியாரில் உண்டு. உயிர் போவது உறுதி. ஆனால் அதனை உணராமல் களிமயக்கத்தில் மக்கள் கட்டுண்டு இடப்பது, பலிபீடத்திற்கு அழைத்துச் செல்லப்படும் ஆடு தன்னுயிரைப் பறிகொடுப்பதற்கு முன் தன்னைக் கொலைவிருக்கும் பூசாரியின் கரத்தில் உள்ள தளிரை உணவென்று மகிழ்ந்து உட்கொண்டு மகிழ்வது போலாகும் என்கிறார். 'வெறி அயர் வெங்களத்து வேல் மகன் பாணி முறி ஆர் நறுங் கண்ணி முன்னர்த் தயங்க மறி குளகு உண்டன்ன மன்னா மகிழ்ச்சி அறிவுடையார் கண் இல்'

**இலக்கியம்**

கல்வியின் சிறப்பையும் மேன்மக்களின் இயல்பையும் இஃது நன்கு விளக்குகிறது. 'கல்வி அழகே அழகு' 'கல்விகரையில கற்பவர் நாள் சில மெல்ல நினைக்கின் பிணி பல' ஆதலால் ஆராய்ந்து அமைவுடையவற்றை அன்னம்போல் கற்க வேண்டும். 'கல்லாரேயாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின் நல்லறிவு நாளுந்தலைப்படுவர்' எனவும் கல்வியானது 'மம்மர் அறுக்கும் மருந்து' எனவும் கூறுகின்றார்.

நீர் நுழைய முடியாத இடத்தில் நெய் நுழையும் நெய் நுழைய முடியாத இடத்தில் புகை நுழையும். அதுவும் நுழைய முடியாத இடத்தில் நுழைபவன்தான் இரவலன் என நகைச்சுவையாகக் கூறுகின்றார்.

வளர்பிறைபோல் வளர்வது பெரியார் நட்பு. தேய்பிறைபோல் தேய்வது சிறியார் நட்பு. நாய் நெஞ்சம் படைத்தோர் நட்பு சிறந்தது வாலைப் பற்றியுடையோர் நட்பை நீக்குவது நன்று என எடுத்துரைக்கின்றது.

*

நா. மயில்வாகனம்

# கொலைகள் பல செய்து
## மூடி மறைத்த முதலாளி

**நீதிமன்றத்துக்கு வந்த உண்மைச் சம்பவம்**

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் கொலை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிஸ்கால் அதிகாரியால் மனித எலும்புகள் கொண்ட இரு பெரிய பெட்டிகள் சான்றுப் பொருட்களாகச் சமர்ப்பிக்கப்பட்டன.

ஜூரர்களினதும், மன்றத்தில் இருந்தவர்களினதும் பார்வை அந்த எலும்புகள் மேல் பதிந்திருந்தது.

குற்றவாளிக் கூண்டில் எதிரி சில்வா அமர்ந்திருந்தான்.

பல லட்சங்கள் பெறுமதியான சொத்துக்களுக்கு அதிபதியான அவன், மேல் நாட்டு உடையில் இருந்தான். பல ஏக்கர் நெல் வயலுக்கும், தோட்டங்களுக்கும் சொந்தக்காரனான அவன், தவறணை முதலாளியாக, ஒப்பந்தக்காரனாக, மில் முதலாளியாக, பல தொழில்களை நடத்தி, பல அடியாட்களை மெய்ப்பாதுகாவலர்களாக வைத்து சிறிய சாம்ராஜ்யத்தையே உருவாக்கியிருந்தான்.

பொலிஸ் விசாரணையில் வெளிவந்த தகவல்கள் அதிர்ச்சி அளிக்கக்கூடியனவாக இருந்தன.

எதிரியிடம் வேலை செய்த ஜெயசேகரா மர்மமான முறையில் மறைந்துவிட்டார். வேலைக்குப் போவதாக மனைவியிடம் சொல்லிவிட்டுப் போனவர் பின் வீடு திரும்பவில்லை.

ஒரு பாதத்தின் பின் எதிரியின் சாராயத் தவறணையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிசாருக்கு எதிரியிடம் வேலை செய்த பண்டாவும் மர்மமாக மறைந்தது தெரிய வந்தது. இருவருடைய மறைவிற்கும் தொடர்பு இருப்பதாகச் சந்தேகித்த பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டனர்.

தனது சட்டவிரோத நடவடிக்கைகளையும், இரகசியங்களையும் தெரிந்து வைத்திருந்த ஜெயசேகராவை ஒழித்துக் கட்டத் தீர்மானித்த எதிரி, பண்டா மூலம் அதை நிறைவேற்றினான். பின்பு பண்டாவும் கொலை செய்யப் பட்டான்.

இப்படிச் சங்கிலித் தொடர்போல் பல கொலைகளைச் செய்தான். உடல்களை நிலத்தில் போட்டு அதன் மேல் புல்டோசரை ஓட்டிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

வில்வம் பசுபதி

## நாளது வந்துமாச்சு!

குழந்தையாய் தவழும்போது
குறைநிறை தெரியவில்லை
கூடியே மகிழுகின்ற
கொள்கையே இன்பமாகும்
பாலகர் செய்வதெல்லாம்
பார்த்துமே மகிழ்வதாகும்
கேள்விகள் எழுப்பவில்லை
கேடுகள் தெரியவில்லை
பாடியே மகிழும்வண்ணப்
பறவைகள் பருவமாகும்

மூப்பது வந்துவிட்டால்
காப்பவர் ஒருவரில்லை
கிழடுதான் நாமஞ்சூட்டிக்
கேலிகள் பண்ணுவார்கள்
ஒருதடி கையில் ஏந்திக்
குடுகுடு நடையுந்தாண்டி
மறுபடி குழந்தையாகி
மழலைபோல் பேச்சும்பேசி
மகிழ்பவர் ஒருவரில்லை
மரணந்தான் சொந்தமாகும்

அறுபது தாண்டியாச்சு
அறனையும் பேதுபோச்சு
கெடுபிடி ஏதுமில்லை
படுவது நாயிற்கேடு
பலருமே நாக்குறித்துப்
பாவமாம் இடத்தழன்று
அழுந்துமே நோயினாலே
ஆவதோ ஒன்றுமில்லை
நாளது வந்துமாச்சு
நாமினி என்ன செய்ய?

- வ. யோகானந்தசிவம்

# கணிதத்தை திருப்தியாக
## கற்பித்தல் சிக்கலானதா?

(கல்வி)

இற்றைக்கு சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் கணிதம் தொடர்பான பாடங்களாகிய தூய கணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தக எண் கணிதம், எண் கணிதம் என்பன பாடசாலை பாடவிதானத்தில் அமைந்திருந்தன.

பெரும்பாலான பாடசாலைகளில் எண்கணிதம் கற்பிக்கப்பட்டது. சில பாடசாலைகளில் எண் கணிதம், தூயகணிதம், வர்த்தக எண்கணிதம் என்பன போதிக்கப்பட்டன. இவற்றுள் ஒன்றினைத் தெரிந்து க.பொ.த. (சாதாரணதர) பரீட்சைக்கு மாணவர் தோற்ற வேண்டியிருந்தது.

இதனையடுத்த காலப் பகுதியில் ஆரம்ப கணிதம் என்ற பாடம் பாடசாலைகளில் அறிமுகப் படுத்தப்பட்டது. இஃது எண்கணிதம், அட்சர கணிதம், கேத்திர கணிதம் என்பவற்றை உள்ளடக்கிய பாடமாகும். இதனை மாணவர் ஆறும் வகுப்பிலிருந்து (தற்போதைய ஆண்டு ஏழு) எட்டாம் வகுப்பு (ஆண்டு 9) வரை கற்றனர். ஆரம்ப கணித பாடத்தில் எட்டாம் வகுப்பில் திறமை பெற்ற மாணவர்களே தொடர்ந்து தூயகணிதம் கற்க நெறிப்படுத்தப்படுவர். ஒன்பதாம், பத்தாம் வகுப்புக்களில் மாணவர்களின் தலைமைக்கேற்ப தூயகணிதம், எண்கணிதம் ஆகிய பாடங்கள் வெவ்வேறாகக் கற்பிக்கப்பட்டன.

### பாடத்திட்டம்

இப்பாடங்களை உள்ளடக்கும் பகுதிகளை நோக்கின் தூயகணிதம் என்ற பாடம் எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திர கணிதம், திரிகோணகணிதம் என்ற பகுதிகளை அடக்கிய பாடமாகும்.

ஆரம்ப கணிதம், தூய கணிதத்தினைப் போன்று நான்கு பகுதிகளைக் கொண்டிருந்ததாயினும் பரீட்சிக்கப்படும் தரம் தூயகணிதத்தைவிட இலகுவானதாக அமைந்திருந்தது. எண்கணிதம் தனித்த எண்கணிதப் பகுதிகளைக் கொண்ட பாடமாகும் வர்த்தக எண்கணிதம் வர்த்தக ரீதியான பெரும்பாலும் நூற்று வீதங்களை உள்ளடக்கிய எண்கணிதப் பாடத்திட்டத்தைக் கொண்டிய பாடமாகும்.

இத்தகைய பலதரப்பட்ட கணிதம் சம்பந்தமான பாடங்களிலிருந்து)

(6ஆம் பக்கம் பார்க்க)

பொ. ச. ஞானசீலன்

''என்ன, ஒரு மாதிரி இருக்கிறாய்?''

'ஒன்றுமில்லை அக்கா. என்னுள் யோசித்தேன். நெஞ்சு வலிக்கிறது. நின்று விடும் போலிருக்கிறது. நான் சாகப் போகிறேன்.'

'மடைப் பயல்!'

அக்கா இப்படித்தான் கூறினாள்! அதில் கனிவு இருந்தது! அன்பு ஆதரவு எல்லாம் இருந்தன.

அக்காவே தொடர்ந்தும் கூறினாள்—

அவர் யோசித்தாராம், சாகப் போகிறாராம்!



ஒரு குருவி: உவர்முந்தி கோழிப்பண்ணை வைச்சிருந்தவர் இப்ப புறுப் பண்ணையாக்கிப் போட்டாரோ?...?

மற்றது: புருக்களின்ர காலிலை குப்பிப் போத்திலைக் கட்டி வவுனியாவிலிருந்து பெற்றோல் கடத்தப்போறாராம்!

அ. வித்தியா
பண்டத்தரிப்பு.

# கடிகாரங்கள்
## கதைக்கும் போது...!

உருவகம்

நல்ல யோசனை! அப்படி என்ன நடந்துவிட்டது உனக்கு? ......ம்!'

எல்லோரும் மதிப்போடு பார்க்கும் அந்த பெரிய சுவர்க் கடிகாரம் இப்போ தாயின் கைக்குழந்தைபோல காட்சியளித்தது.

நேரம் நடுச்சாமம்

உயரிய மெழுகுவர்த்தியொன்று மெலிதாக எரிந்து கொண்டிருந்தது, எனினும் அந்தப் பழைய மாளிகை போன்ற வீட்டின் வெளிப்புறமெங்கும் இருள் கவிந்து ஒரு வகைப் பய உணர்வையே பரப்பிக் கொண்டிருந்தது.

ஆனால்! அன்போடு ஏசிய அக்காவுக்கு இது பழைய பாடம். இருட்டில் இருக்கும்போது தான் ஆந்தை அக்காவுக்கு புத்தி சுயமாக ஒளிவிடும். கண்ணை சிறிது விழித்து மூடினாள்.

'ஆமாம். என்ன தம்பி சொன்னாய்?'

சுவர்க்கடிகாரத்திற்கு வயது நாற்பதிற்கு மேலிருக்கும் ஆயினும் கடிகாரம் தம்பிதான். வயதிற் குறைந்த போதிலும் ஆந்தை அக்காதான்! இது தாய்க்குலத்துக்குரிய தனிப் பண்பு இது எவருமே மறுக்காத உலக வழக்கு.

'என்னுள் யோசித்தேன் அக்கா. கணக்கிட்டு கூட்டிப் பார்த்தேன். அதை—'

'எதைக் கூட்டிப் பார்த்தாய்?'

மணிக்கூட்டின் டிக் டிக் சத்தம் இப்போ படபடப்போடு கேட்டது.

'என் இதயத்துடிப்பைத்தான் கணக்கிட்டுப் பார்த்தேன். டிக் டிக் டிக் டிக் என அறுபது விநாடி ஒலித்தால் தான் ஒரு நிமிடம் கழிகிறது'

'ஆமாம்?'

'அப்படி அறுபது நிமிடம் கழிந்தது ஒரு மணி நேரம் கழிய எத்தனை முறை ஒலிக்கவேண்டும்?'

ஆந்தை அக்கா உடன் பதில் சொன்னாள்.

'அறுபதை அறுபதால் பெருக்க 3,600.'

'அப்படியானால் நாள் ஒன்றுக்கு!'

'இருபத்து நாலால் பெருக்க 86,400 இத்தனை விநாடி கொண்டது ஒரு நாள்.'

'மாதம் ஒன்றுக்கு!'

ஆந்தை அக்காவின் கணித மூளை மின் வேகத்தில் வேலை செய்தது.

'இதென்ன பெரிதா? முப்பதால் பெருக்க 25,92,000 வருகிறது'

'ஐயோ' என்றது மணிக்கூடு.

'என்ன!'

'இப்படி அடிக்க என்னால் இனி இயலாது! நெஞ்சம் நோகிறது! என்னால் முடியாது!'

அந்த நடுச்சாம நேரம் மேலும் பாரமுற்று நின்றது. ஆனால் ஆந்தை அக்காவின் உதடு மெல்லெனச் சிரித்தது. அவள் இலேசாகச் சிறகடித்து ஓரடி உயர எழுந்தாள். பின்னர் தம்பியின் எதிரேயுள்ள தளபாடத் தட்டொன்றில் வந்து அமர்ந்தாள்.

'தம்பி—'

'என்ன?'

'உனக்கு எப்படி இந்தப் புத்தி பேதலித்தது?'

'ஏன்?'

'உன்னை யார் அத்தனை தரம் அடிக்கச் சொன்னது?'

'ஏன் அக்கா? இருபத்தைந்து இலட்சத்திற்கு மேல் அடித்தால் தானே ஒரு மாதம்? அப்படியானால் மூன்று கோடிக்கு மேல் அடித்தால் தானே ஒரு வருடம்? அந்த விகிதத்தில் ஐந்து வருடம் வாழப் பதினைந்து கோடிக்கு மேல் இதயம் அடிக்க வேண்டும் ... இயலவே இயலாது! நான் சாக வேண்டியதுதான்!'

'மடையா!' என்றாள் அக்கா.

'ஏன்?'

உன்னை அப்படி ஒரு வருடமே அடிக்கச் சொல்லவில்லை. நீ அடிக்க வேண்டியதும் இல்லை சும்மா சுகமே இருந்து நீடூழி வாழலாம்.'

எப்படி அக்கா?'

'நீ ஆயிரம் ஆயிரமென அடிக்க வேண்டியதில்லை உன்னால் ஒரு முறை அடிக்க முடியுமல்லவா?'

'தாராளமாக!' இவ்விதம் சிரித்தது மணிக்கூடு

'அவ்விதம் நீ ஒரு முறை அடி. போதும்'

'அக்கா, நீங்கள் என்ன கூறுகிறீர்கள்!'

'உண்மையைத்தான் உனக்குக் கூறுகிறேன், கேள். எதிர்காலத்தை எண்ணிக் கணக்கிட்டு ஏக்பாரத்துள் அமிழ்ந்து சாகாதே! அப்போது வருவதை அப்போது செய்தல் போதும்'

அப்படியானால்?'

'அத்தனை தரத்தையும் நெஞ்சத்துள் நீ ஒன்றாகச்சேர்த்து அடிக்க எண்ணாதே. லீவாக, ஒழுங்காக, ஒரு விநாடிக்கு நீ ஒரு முறை மட்டும் அடி. அது போதும்! உலகம் உன்னிடம் எதிர்பார்ப்பது [illegible] வான செயலை மட்டும் [illegible] பார்க்க)

நாகை. பத்மநாதன்

# அகண்ட ஆகாயவெளியில்
## அயராது சுழலுகின்ற கிரகங்கள்

(வானியல்)

சூரியனைச் சுற்றிப் பிரயாணம் செய்யும் கோள்களில் மிக கிட்டிய தூரத்தில் பிரயாணம் செய்யும் கோள் புதன் வெகு தூரத்தில் பிரயாணம் செய்யும் கோள் புளூட்டோ.

இந்த இரண்டு கோள்களுக்கும் இடையில் வெள்ளி பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய கோள்கள் முறையே அடுத்தடுத்து நீள்வட்டத்தில் சூரியனைச் சுற்றிச் செல்லும் கோள்களாகும்

### புதன்

புதன் சூரியனில் இருந்து 3 6 கோடி மைல்கள் தூரத்தில் உள்ளது. அதனுடையவிட்டம் 300 மைல்கள் இக்கோள் தன்னைத்தானே 88 நாட்களிலும் சுற்றிக்கொண்டு சூரியனையும் 88 நாட்களில் சுற்றி வருகின்றது. அதாவது புதனின் 4 வருடங்கள் பூமியின் ஒரு வருடத்துக்குச் சமன். பூமியின் பொருண்மை 1 எனின் இக்கோளின் பொருண்மை 0 054 ஆகும். இதன் அடர்த்தி 4. 1, இதற்குத் துணைக்கோள்கள் எதுவும் இல்லை இக்கோளின் ஒரு பகுதி எப்போதும் பகலாகவும் மறுபாதி எப்போதும் இரவாகவும் உள்ளது.

இக்கோள் பூமிக்கு அருகில் வரும்போது பூமியை நோக்கி இருக்கும் பாதி இருண்டிருக்கும். சூரியன் மத்தியிலும் புதனும் பூமியும் எதிர் எதிரே சூரியனின் இரு பக்கங்களிலும் இருக்கும்போது சூரியனுடைய அதிக வெளிச்சத்தினால் இக்கோள் நன்றாகத் தென்படுவதில்லை. சூரியனை நோக்கி இருக்கும் பகுதியில் வெப்பம் 410 பாகை செ. இலும் இருண்டபகுதி 0 பாகை செ. இலும் உள்ளது இக்கோளில் வாயு மண்டலம் இல்லை.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையேவருவதால் கரும்புள்ளிபோல் தென்படும் இக்கோளை சூரிய உதயத்துக்கு சற்று முன்பு, சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பும் தெளிவாகப் பார்க்க முடியும். இக்கோளில் உயிரினங்களோ தாவரங்களோ காற்று மண்டலங்களோ

(6 ஆம் பக்கம் பார்க்க)

எஸ். ஆர். பேரின்பநாயகம்



ஒருவர்: வருங்காலத்தில் எமகட யாழ்ப்பாணத்துச் சனங்கள் பறக்கிற பிளேனுக்கு மேலே எதிர்காத்திலை நின்று சாதனை நிலைநாட்டப் போகுதுகள்

மற்றவர்: அதெப்படி!

ஒருவர்: இப்ப மினி பஸ்சுகளிலே வசதியில்லை வெளி எதிர்காத்திலையும் கூரைக்குமேலே நின்று கொண்டெல்லே சனம் போய்வருகுது...?

அ. வித்தியா
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் நடிப்புலகிற்கு முழுக்குப் போட்டு விடுவேன்

## நளினி தகவல்

வைவசமுள்ள படங்களை முடித்துக் கொடுத்து விட்டு நடிப்புலகிற்கு முழுக்குப் போட்டுப் போகிறேன்.

இயக்குனர் ராமராஜனைக் கைப்பிடித்தவுடன் வழமையாக நடிகைகள் கூறும் பாணியில் நளினி இப்படிக் கூறியிருக்கிறார்.

இயக்குனர் ராமராஜன் நளினி ''காதல் கதை'' சினிமாவுலகில் பரபரப்பாக பேசப்பட்டது. அதைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி இருவருக்கும் திருமணம் நடந்ததும் தெரிந்ததே.

நளினி கூறுகிறார்:-

இப்போது நடித்துக் கொண்டிருக்கும் படங்களை முடித்துக் கொடுத்து விட்டு நடிப்புலகிற்கு முழுக்குப் போட முடிவு செய்து விட்டேன்.

அதே நேரம் என் கணவர் இயக்கும் ஒரு படத்தில் மட்டும் அவருக்கு ஜோடியாக நடிப்பேன். இது எமது 'காதல் கதை' ஆரம்பமான போது ஏற்பட்ட ஆசையாகும்.

அந்த நீண்ட நாள் ஆசையை அவரிடம் சொன்னபோது அவரும் அதற்கு சம்மதம் தெரிவித்து விட்டார்.

அந்தப் படத்தில் நடித்து முடித்ததும் பூரணமாக விலகி விடுவேன். என் முடிவில் எந்தவித மாற்றமும் கிடையாது.



வீட்டு மனைவியாக இருந்து என் கணவரின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் துணை நிற்பேன் என்கிறார் நளினி.

### யார் அந்தப் பாடகி?

பல பாடகிகளிடம் நீங்கள் பாடிய பாடல்களில் உங்களுக்கு பிடித்தது எது? என்று கேட்டால் ஒவ்வொருவரும் ஒரு பாட்டைத் தங்களுக்குப் பிடித்தது என்று சொல்கிறார்கள்.

ஜானகி ''மச்சானைப் பார்த்தீர்களா'' என்றார். ஈஸ்வரி ''எலந்தப் பழம்'' என்றார்.

ஆனால் ஒரு பாடகி மட்டும் தான் பாடிய எல்லாப் பாடல்களுமே தனக்கு மிகவும் பிடித்தவை தனக்குப் பிடிக்காத பாடல்களை தான் பாடுவதில்லை என்று பதில் சொன்னார்.

யார் வாணி ஜெயராமா? இல்லை எம். எஸ். சுப்புலட்சுமி

தயாரிப்பு: பேரின்பம்

## அமிதாப் 1990 இல் அமைச்சர் ஆவாரா?

1990ஆம் ஆண்டளவில் பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சன் அமைச்சராகும் வாய்ப்பு உண்டு

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி இதைச் சொல்லவில்லை

அப்படியானால்...!

'ஆன்லுக்கர்' பத்திரிகையின் 1987ஆம் ஆண்டுக்கான சோதிட பலனிலேயே இப்படிக் கூறப்பட்டுள்ளது

அந்தப் பலனில் கூறப்பட்டுள்ளதாவது:-

அமிதாப் ஒரு காலத்திலும் பிரதமராக வர முடியாது. ஆனால் ஓர் அமைச்சராக வரலாம். அதுவும் 1990 ஆம் ஆண்டளவில்தான் சாத்தியமாகலாம்.

இந்த ஆண்டு இவரது அதிகமான படங்கள் தோல்வியைத் தழுவும். எனினும் நடிப்பை விட்டு விடமாட்டார்.

ரேகாவுடனான தொடர்பு நீடிக்கும்

இப்படி அந்தச் சோதிட பலன் கூறுகிறது. ✱

## மூன்று வருடங்களின் பின்தான் திருமணம்

### சரிதா கூறுகிறார்

இப்பொழுது திருமணம் என்ற பேச்சுக்கே இடமில்லை மூன்று வருடங்களின் பின்னர் தான் அதைப்பற்றிச் சிந்திக்க உள்ளேன்.

இப்படிக் கூறுகிறார் பிரபல நடிகை சரிதா.

அவர் மேலும் கூறுகையில்,

நல்ல கதை அம்சம் உள்ள படங்களிலேயே நான் நடிக்கச் சம்மதிக்கிறேன். வெறும் ''மசாலாப்'' படங்களை ஏற்றுக் கொள்வதில்லை.

இதனால் சில விஷமிகள் நான் சினிமாத் துறையை மெல்ல, மெல்ல விடப்போவதாகவும்-

அதன் பின் திருமணம் செய்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபடப் போவதாகவும் கதை பரப்பி வருகிறார்கள்


இதில் எதுவித உண்மையும் இல்லை

இன்னும் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக படங்களில் நடிப்பேன். இப்பொழுதும் எங்கேயோ, வாழ்க வளர்க, பூப்பூவா பூத்திருக்கு, ஏட்டிக்குப் போட்டி, ஆதிபகவன் இன்னும் பல படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன்

இப்படிக் கூறுகிறார் சரிதா. ✱

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 60



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..........

வயது: ..........

விலாசம்: ..........

ஒப்பம்: ..........

### போட்டி விதிகள்

சொற்சிலம்பப் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. பிறருக்கு உதவி செய்வது | 1. இரக்கம் |
| 4. வள்ளிக்கு ஔவை சொன்ன உதாரணம் | 2. சாசனம் |
| 6. ஜோஸ்யர் | 3. புத்த ஆயுத சாதனம் |
| 8. பெண்கள் பருவங்களில் ஒன்று | 5. குப்பம் |
| 10. ரசிப்பவன் | 7. தலைகீழான புள்ளை |
| 12. மனைவி | 8. நளன் காவியத்தில் தூதுப் பறவை |
| 14. தமிழகத்தில் இருந்து வெளிவரும் பிரபல நாளிதழ் ஒன்றில் ஒரெழுத்து ஒளித்து விட்டது. | 9. மருத்துவமனை |
| 15. பிசி | 11. வேலிக்கு அவசியமானது |
| 16. சபையில் பரிமாறப்படும் இனிப்புப் பதார்த்த உணவுக்கு ஒரு எழுத்து இங்கு இல்லை | 13. சூரியன் |
| 17. பக்கம் | 16. கலைமகள் |
| 18. ஒரு நாட்டினுள் பிறவேசிக்க இதுவும் தேவை | 17. ரசம் |
| 19. நில தளராமை | 18. எமது வாழ்வை நிர்ணயிப்பது இது என்பது பலரின் வாதம். |
| 20. சிறையின் நகர் | |

### சொற்சிலம்பம் இல. 58 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. தொல்காப்பியம், 5 ரம் (அரம்), 7. வாசல் 9 பலா, 10. மா (மான்) 11. வனிதை 13. திமிர், 15. கோபம் 18. திணறு, 19. அபயம் 21 விதவை, 22 குடி 23. குகன் | 1. தொடுவான் 2. காதல் 3. பிரதானி 4. யம் 6. சிலாபம் 8. சமாதி 11. வர்ணம் 12. தைகோ (கோதை) 14. மிதியடி 16. பாதன் 17. ணுஅ (அணு) 20. பகு 21. விக |

### சொற்சிலம்பம் இல. 58 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாவது பரிசு:- செல்வி. நளாயினி பத்மநாதன், சண்முகவாசா, இளவாலை.

இரண்டாம் பரிசு:- திரு. சி. அ. அழகராஜா, 689/1, புகையிரத வீதி, மன்னார்.

மூன்றாம் பரிசு:- திருமதி. சந்திரா கணபதிப்பிள்ளை, நெட்பாலு, புதுக்குடியிருப்பு

✱ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

## கொலைகள் பல செய்து...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

பின்பு எலும்புகளைப் புதைத்தான்.

கொலைகள் மட்டுமின்றி கொலைகளும் அடுத்த எதிரி கொலைக்குப் பயன்படுத்திய களவாடப்பட்ட காரைத் தோட்டத்தில் பெரிய குழி தோண்டி புதைத்து வைத்தான்.

இவை யாவும் சான்றுப் பொருட்களாக மன்றத்தில் பொலிசாரால் சமர்ப்பிக்கப்பட்டன.

அரச சட்டத்தரணி தனது ஆரம்ப உரையில் ஜூரர்களுக்கு வழக்கின் நிகழ்வுகளை விரிவாக எடுத்துரைத்த பின்னர் சாட்சிகளை அழைத்தார்.

முதலாவது சாட்சி கில்பேர்ட் சாட்சியமளிக்கையில் எதிரி, தன்னையும் இறந்த சைமனையும் தோட்டத்திற்குக் கூட்டிப் போய் ஒரு பெட்டியை சைமனிடம் கொடுத்துத் திறக்கச் சொன்னதாகவும் திறந்த போது அதற்குள் பெரிய விஷப்பாம்பு இருந்ததாகவும், அதைக் கையால் பிடிக்கும்படி சைமனிடம் ரிவால்வரைக் காட்டிப் பயமுறுத்தியதாகவும் சொன்னார்.

மரண பயத்திலுல் நடுங்கியபடி பாம்பைப் பிடிக்கவே அது இரு தடவை சைமனைக் கொத்தியதாகவும், அதன் பின் பாம்பு கட்டுக் கொல்லப்பட்டதாகவும் சொன்னார். அன்று மாலையே சைமன் இறந்து விட்டதாகவும் பாம்புக் கடியினால் சைமன் இறந்ததாக அவரின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் சொன்னார்.

இச்சம்பவத்தைப்பற்றி யாருக்கும் தெரிவித்தால் இதேகதி தனக்கும் ஏற்படும் என்று தன்னை எதிரி பயமுறுத்தியதாகச் சொன்னார்.

அடுத்துச் சாட்சி சொன்ன மார்ட்டின், இறந்த பண்டா தனது உறவினர் என்றும் தான் அவரைக் கடைசியாகச் சந்தித்த போது கலவரமும் கிலேசமும் கொண்டிருந்தார் என்றும், விசாரித்த போது தான் எதிரியால் கண்காணிக்கப்படுவதாகவும் ஜெயாவிற்கு நடந்தது தனக்கும் நடக்கும் என்று சொன்னதாகவும் சொன்னார். அவர் ஜெயா என்று குறிப்பிட்டது இறந்த ஜெயசேகராவை என்பதை பிறகு உணர்ந்ததாகச் சொன்னார்.

அரசாங்க இரசாயனப் பரிசோதகர் தான் எலும்புகளைப் பரிசோதித்ததாகவும் அவை முப்பதுக்கும் ஐம்பது வயதுக்குமிடைப்பட்ட நாற்பது வயது மதிக்கக் கூடிய ஆண்களின் எலும்புகள் என்றும் தெரிவித்தார்.

அரச சட்டத்தரணி தனது தொகுப்புரையில் ஜெயசேகராவைக் கொலை செய்த எதிரி பண்டாவின் உதவியுடன் உடலைப் புதைத்ததாகவும், கொலையை மூடி மறைக்க பண்டாவைக் கொலை செய்ததாகவும். பண்டா கொலை பற்றி சைமன் அறிந்திருந்ததால் சைமனையும் கொலை செய்ததாகவும் சொன்னார். சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்கள் இந்த எதிரிதான் இக் கொலைகளைப் புரிந்துள்ளார் என்பதை நியாயமான சந்தேகத்திற்கப்பால் நிரூபிக்கின்றன என்றார்

சாட்சியங்களையும் தொகுப்புரைகளையும் பரிசீலித்த ஜூரர்கள் ஏகமனதாக எதிரியைக் குற்றவாளியாகக் கண்டனர், நீதிபதி எதிரிக்கு மரணதண்டனை விதித்தார். ✱

## அகண்ட ஆகாய வெளியில...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

எதுவும் இல்லை

### வெள்ளி

நவகோள்களில் மிகவும் பிரகாசமாக சுடர் விட்டுப் பிரகாசிக்கும் கோள் இதுவேயாகும். பகலில் கூட இக்கோளைக் காணக்கூடியதாக இருக்கும். பொருள்களின் நிழல்களைக் கூட இதன் ஒளியால் காணக்கூடியதாக இருக்கும்.

இக்கோள் சூரியனில் இருந்து 6.7 கோடி மைல்கள் தூரத்தில் உள்ளது 7600 மைல்கள் நீளமுள்ள விட்டத்தையுடைய இக்கோள் சூரியனைச் சுற்றும் கால அளவும் தன்னைத் தானே சுற்றும் கால அளவும் 225 நாட்கள் ஆகும். ராடார் கருவிகள் துணைக்கொண்டு 247 நாட்கள் எனக் கண்டு பிடித்துள்ளார்கள்

பூமியின் பொருண்மை 1 எனின் இக்கோளின் பொருண்மை 0.814 ஆகும் இதன் அடர்த்தி 4.9. இக்கோளுக்குத் துணைக்கோள்கள் இல்லை.

வெள்ளி சூரியனைச் சுற்றிவரும்போது சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் வரும் இக்கோள் பூமிக்கு அருகில் வரும் போது 2.6 கோடி மைல்கள் தூரத்திலும், பூமியும் வெள்ளியும் சூரியனுக்கு எதிர் எதிராக இருக்கும்போது 16 கோடி மைல்கள் தூரத்திலும் உள்ளது. இதன் மேற்பரப்பின் வெப்பநிலை 400 பாகைசெ இக்கோளில் காந்த மண்டலம் இல்லை.

### பூமி

எமது கோளான பூமி சூரியனில் இருந்து 9.3 கோடி மைல்கள் தூரத்தில் உள்ளது. இதன் விட்டம் 7900 மைல்கள் ஆகும் இக்கோள் தன்னைத்தானே ஒரு நாளிலும் சூரியனை 365¼ நாட்களிலும் சுற்றி வருகின்றது பூமியின் அடர்த்தி 5.52.

இக்கோளுக்கு சந்திரன் மட்டுமே துணைக்கோளாகும்.

பூமியின் பொருண்மையை விட புதன், செவ்வாய் இவைகளின் பொருண்மை மிகவும் குறைவாகும். நாம் பூமியில் வசித்தாலும் பூமியினுள் பொதிந்திருக்கும் இரகசியங்கள், விந்தைகள் ஏராளம் இவைகளைப் பற்றிப் பின்பு தெரிந்து கொள்வோம்.

### செவ்வாய்

செந்நிறமுள்ள இக்கோள் பூமிக்கு வெளிப்புறத்தில் நீள் வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றது. இக்கோள் சூரியனில் இருந்து 14.2 கோடி மைல்கள் தூரத்தில் உள்ளது. இதன் விட்டம் 4200 மைல்கள்

இக்கோள் தன்னைத் தானே 24 மணி 37 நிமிடத்தில் சுற்றி 687 நாட்களில் சூரியனைச் சுற்றி வருகின்றது.

பூமியின் பொருண்மை 1 எனின் இதன் பொருண்மை 0.108 அடர்த்தி 3.8. இக்கோளுக்கு 2 துணைக்கோள்கள் உண்டு பூமியில் காந்தசக்தி இருப்பதுபோல் இக்கோளில் காந்த சக்தி இல்லை. வாயு மண்டலம் 8 மைல் உயரத்துக்குப் பரவியுள்ளது செவ்வாயில் குளிர் அதிகம் பகல் வேளையில் வெப்பநிலை சுமார் 60பாகை F லிருந்து -60பாகை F வரை உள்ளது இரவில் -60பாகை F லிருந்து 150 பாகை F வரை உள்ளது.

இக்கோள் சூரியனைச் சுற்றி வரும்போது சூரியன், பூமி, செவ்வாய் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் 15 - 17 வருடங்களில் 7 அல்லது 8 முறைகள் இடையிடையே ஒன்றுக்கொன்று எதிரில் காணப்படும் காலங்களில் செவ்வாயின் அமைப்பைக் காண்பது வெகு இலகுவாக இருக்கும். இது போன்று ஒருமுறை வெகு தொலைவிலும் காணப்படும் இக்கோளைப்பற்றிய முழு இரகசியங்களையும் அறிவதற்கு விஞ்ஞானிகள் வானவியலாளர்கள் இன்றும் முயற்சிக்கிறார்கள். ✱

## கணிதத்தைத் திருப்தியாக...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் தமது ஆற்றலுக்கு ஏற்ப ஒன்றினைத் தெரிந்து பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு அளிக்கப்பட்டது கடந்த காலங்களில் எண்கணிதம் என்ற பாடத்தில் சித்திபெய்தி மேற்படிப்பினைத் தொடர்ந்தோரும் தொழில் வாய்ப்பினைப் பெற்றோரும் சிறந்த நிர்வாகத்தர்களாகவும் கல்விமான்களாகவும் திகழ்ந்ததை கண்கூடு. பல காலங்களுக்கு முன் கணிதபாடம் ஒரு கட்டாய பாடமாக அமையாது இருந்தமை நினைவிற்கொள்ளற்பாலது.

### புதிய திட்டம்

1972ஆம் வருடம் நடைமுறைப்படுத்திய கல்வித் திட்டத்தின்படி கணிதம் (எண்கணிதம், அட்சர கேத்திர கணிதம், நவீன கணிதம் ஆகியவற்றை உள்ளடக்கியது) ஆறும் வகுப்பிலிருந்து (ஆண்டு 7) சகல பாடசாலைகளிலும் கட்டாய பாடமாக கற்பிக்கப்பட்டு வருகின்றது

மேற்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்கள் தொழில் வாய்ப்பினைத் தேடும் சகலரும் கணித பாடத்தில் சித்திபெய்திட வேண்டியது அவசியம்.

### பாடத்திட்ட விஸ்தரிப்பு

தற்போதைய பாடத்திட்டம் முன்னைய கணிதம் சம்பந்தமான பாடங்களைவிட அளவிலும் ஆழத்திலும் கூடியதாகும் நடைமுறையிலுள்ள கணித பாடத்திட்டம் முன்பிருந்த தூயகணிதம் என்ற பாடத்திற்குரிய பாடப் பகுதிகளைவிட மேலதிகமாகத் தொடைகள் (Sets, நிகழ்தகவு (Pro-bablity). புள்ளிவிபரவியல் (Statistics) காப்புறுதி (Insurance) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இப்பாடத்தினை சகல மாணவர்க்கும் திருப்திகரமாகக் கற்பிப்பது ஒரு சிக்கலான விடயமென்பதனை கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் நன்கறிவர்.

### கற்பித்தலும் பரீட்சித்தலும்

இடைநிலை வகுப்புகளில் கணிதபாடம் கற்பித்தல், பரீட்சித்தல் என்பன பற்றிப் பின்வரும் விடயங்களைச் சிந்திப்பது நன்மை பயக்கும்

குறிப்பிட்ட காலப் பகுதியில் இவ்விரிந்த பாடத்திட்டத்தினைக் கொண்ட பாடத்தை சகல மாணவர்க்கும் திருப்திகரமாக கற்பிக்க முடியுமா?

உளநூல் வல்லோரின் கொள்கைக்கிணங்க சில பாடங்களைக் கற்க அப்பாடங்களுக்குரிய சிறப்பாற்றல் மாணவர்க்கு அமைவது அவசியமாகும்.

கேத்திர கணிதம் போன்ற நுட்பமான பகுதியினைப் புரிந்து கொள்ளும் சிறப்பாற்றலில்லாத மாணவனை அப்பகுதியினைக் கற்குமாறு பணித்தல் அவன் இயல்பாற்றலைத் தடை செய்வதோடு மேலதிக சுமையைப் பாரப்படுத்துவதாக அமையுமா?

மாணவர்களின் பெரும் பகுதியினர்க்கு எண்கணிதப் பகுதிகளான நான்கு விதிகள் (கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்) என்பனவும் அளவியல் (பரப்பு, கனஅளவு) நூற்று வீதம் சம்பந்தமான பகுதிகளுமே வாழ்க்கைக்கு மிகப் பயனளிக்கக்கூடிய பகுதிகளாகும்.

அட்சரகணிதம், கேத்திரகணிதம் என்ற பகுதிகளின் அடிப்படைத் தத்துவங்களை ஆண்டு ஒன்பது வரைக்கும் கற்பித்தல் போதியதாக அமையாதா? சகல மாணவர்க்கும் ஆண்டு பதினொன்று வரையும் அட்சர கேத்திர கணிதப்பகுதிகள் கற்பித்தல் அவசியந்தானா?

நடைமுறையிலுள்ள கணிதபாடத்தில் சில பகுதிகள், உதாரணமாக நிகழ்தகவு, புள்ளிவிபரவியல் ஆகியன மாணவர்கள் முதிர்ச்சிக்கு அப்பாற்பட்டனவா? நிகழ்தகவு, புள்ளிவிபரவியல் ஆகிய பகுதிகள் முன்பு பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலுமே கற்பிக்கப்பட்ட பகுதிகளாகும்.

கணிதப் சம்பந்தமான முன்பிருந்தது போன்ற பாடக்கட்டங்களிலிருந்து மாணவர்களின் ஆற்றலுக்கேற்ப ஒன்றினைத் தெரிந்து கற்றுப் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் அளிப்பது நன்றா?

மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரையும் இவ்விடயங்களை ஆழ்ந்து அலசி ஆராய்தல் அவசியமாகும். ✱

## யாழ் --

(4-ம் பக்க தொடர்ச்சி))

ளார் முற்றுந்துறந்தவராயினும் தமிழன்னையைத் துறக்க முடியாத நிலையில் கந்தசாமிப் பெரியாரையும் மறக்க முடியாதவராயிருந்தார் கந்தசாமியாரின் பிரிவு அடிகளாரை வெகுவாக வாட்டவே அவர் வாடிய நிலையில் இரங்கிப்பாடிய பாடல்களைக் கவிதையில் விருத்த ஓலை எனப் பெயரிட்டு வெளியிட்டார் அவர் பாடிய முப்பதுக்கும் அதிகமான பாடல்களில் மூன்றையாவது ஈண்டு அறிந்துகொள்ளல் அமைவாகும்.

கந்தசாமிப் பெயரோன் வேட்கையதி லென்னைக்
கண்டதான் அன்பென்னும் கயிறுகொண்டு
பிணித்தான்
அந்தநாள் முதலாக நட்புரிமை பூண்டோம்
அன்மையில்யான் வடநாடு நண்ணியதை அறிந்தே
நம்மடிகள் உறைகின்ற தவப்பள்ளி யாது
நற்றவத்தோர் மூலவரியா தெனவினவித் தெரிந்து
செம்மையுறுஞ் செய்திபொதி ஓலையொன்று விடுக்கச்
சிந்தை வைத்தான் எனவெனக்கோர்
அன்பனறிவித்தான்
ஒருநாள் கழியுமுன்னர் மார்படைப்பு நோயால்
மாளுடலம் பாரில்விழ வானுலகு புகுந்தான்
ஆருயிர்நேர் நண்பனெனும் அவலவுரை செவியில்
அனற்பிழம்பாய் புகுந்துளத்தை உருக்கியதப்
பொழுதில்.

இத்தகைய பாரம்பரியத்திலேதான் பண்டிதமணி அவர்கள் 1934ஆம் ஆண்டில் சிவபதமெய்திய பெரியார் சுவாமிநாதபண்டிதர் அவர்களுக்கு இரங்கற்பா பாடலாயினார்

எடுத்த எடுப்பிலேயே, 'சென்றனரோ' என்று தொடங்கிச் சைவசமயமுஞ் செந்தமிழும் இனி என்படுமோ எனக்கவலை மீதூர நாவலரவர்களின் தமிழைப் பணியை நீள நினைந்து, ஐயர் அவர் ... செய்ததைக் கண்டித்தார்.

—தொடரும்

## கடிகாரங்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

தான்.'

ஆந்தை அதனோடு பறந்து போய் விட்டது

மணிக்கூடு தொடர்ந்து பெருமையோடு இயங்கி நேரம் காட்டுகிறது.

உலகம் அதனை மதிப்போடு பார்த்து நெறிப் படுகிறது.

(சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் ... பாடப் புத்தகத்தில் படித்த சிறுகதையே இதற்கு மூலம்) ✱

## வான் வெளியில்...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

சப்பட்டது.

இதைவிட ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட வேகா-I மார்ச் ஆறாந் திகதியும் வேகா II மார்ச் ஒன்பதாந் திகதியும் ஜப்பானிலால் அனுப்பப்பட்ட பிளானட் ஏ. எம். எஸ். ரி 5. ஆகியவை மார்ச் எட்டாந் திகதியும் இவ்வால்வெள்ளிக்கு மிகவும் அண்மையில் சென்று அங்கிருந்து நேரடியாக பூமிக்குப் படங்களை அனுப்பின. இக்கலங்கள் யாவும் 1985ஆம் ஆண்டு அனுப்பப்பட்டன.

பிரகாசமான ஒரு நட்சத்திரமும் அதைத் தொடர்ந்து குதிரை வால் போன்று பிரகாசமான ஒருவாலும் காணப்படுவதனாலேயே அவை வால் நட்சத்திரங்கள் எனப்படும்.

வால் நட்சத்திரத்தின் வால் எப்போதும் சூரியனுக்கு எதிர்ப்பக்கத்தை நோக்கியே இருக்கும். சூரியனை நோக்கி வருகையில் அதன் வால் பின்னாகவும், சூரியனை விட்டுச் செல்லுகையில் அதன்வால் முன்னாகவும் இருக்கும்.

இப்படி பல்லாயிரக் கணக்கான வால்வெள்ளிகள் சூரியனைச் சுற்றிச்செல்கின்றன. கடலில் எத்தனை மீன்கள் இருக்கின்றனவோ அத்தனை வால்வெள்ளிகள் வானில் உள்ளனவென்று 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கெப்லர் என்னும் விஞ்ஞானி கூறியுள்ளார். ✱

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கசலம் பெறுமதியானது.
மாணவ மணிகளே!
துரித சலவைக்கு நீலம் கலந்த
மில்க்வைற் சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள் உங்கள் சீருடை
களை அதிவெண்மையாக சலவைசெய்கிறது
56 கிறாம் பைக்கற் ரூபா 2/- மட்டுமே.
15 சிறிய வெற்றுப்பைக்கற்றுக்களை அனுப்பி
அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப்
பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற்-யாழ்ப்பாணம்

சஞ்சீவி

28 - 03 - 1987 சனிக்கிழமை

சகாய விற்பனை
மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் 13-4-87 இலும், மானிப்பாய் மருதடி விநாயகர்கோவிலில் 14-4-87 இலும் மில்க்வைற் வாகனத்தில் சகாயவிற்பனையும், அன்பளிப்புகளும் வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து சிறந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
இன்றே மேலுறைகளைச் சேகரியுங்கள்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# அன்று நினைத்ததை இன்று செய்பவர்!

யாழ் குடாநாடு மீது பொருளாதார முற்றுகை ஒன்றை விதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் உள்ளத்தில் இன்று, நேற்று ஏற்பட்டது அல்ல.

1983, 1985 களில் இது பற்றி உலகுக்கு அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

11-7-1983 இல் லண்டனில் இருந்து வெளிவரும் 'டெயிலி ரெலிகிராப்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி சொன்னதாவது:

"தமிழர் அபிப்பிராயம் பற்றி எனக்குக் கவலையில்லை. அவர்களின் உயிர் பற்றி நாம் எண்ணிக்கொண்டு இருக்க முடியாது.

உண்மையில் தமிழரை நான் பட்டினி போட்டால் சிங்கள மக்கள் மகிழ்ச்சி அடைவர்"

25-10-1985 இல் திரு. ஜெயவர்த்தனா பி.பி.சி. வானொலிக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் சொன்னதாவது:

"யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது கஷ்டமான காரியமல்ல. குடாநாட்டுக்கான உணவு விநியோகத்தைத் துண்டித்து விட்டு, ஒருமாத காலத்தில் தீவிரவாதிகளை வெளியேற்ற எம்மால் முடியும்" என்றார்.

ஆகவே தமிழர்மீது பொருளாதார முற்றுகை விதிக்க வேண்டும் என்ற ஆசை தர்மிஷ்டருக்கு 1983 இலேயே ஏற்பட்டு விட்டது.

1987 இல் அந்த எண்ணத்தை அமுல் நடத்தியிருக்கிறார் என்பதுதான் செய்தி.

எல்லாவற்றையும் திட்டம்போட்டு நடத்துவதில் வல்லவர் அல்லவா தர்மிஷ்டர்!

ஆனால் அவரின் திட்டங்கள் ஒன்றுமே பலிப்பதாக இல்லை. இதை அவரே இன்று உணர்ந்திருப்பார்.

1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தம் வடக்கு - கிழக்கு இணைப்புக்குவழி வகுத்தது.

அரசியல் பதவியைப் பிடிப்பதற்காக அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தார்.

ஜனாதிபதியாக வந்தும் அந்த 'இணைப்பு' இன்று பூதாகாரமாக அவர் முன் நிற்கிறது.

அது போல் உணவு விநியோகத்தைத் துண்டித்து தமிழரை அடக்கலாம் என்று போட்ட திட்டமும் தமிழரின் உறுதியான போக்கினால் நிலை குலைந்து போயுள்ளது.




இராணுவ அதிகாரி ஒருவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் கேட்கிறார்:

புதுடில்லியைத் திருப்திப்படுத்த ஒன்று, இரண்டு அங்குலங்கள் ஏணியை இறக்கி விடுவோமா?

இப்படி அமைந்துள்ளது இந்தக் கேலிச் சித்திரம்.

சென்ற 20 ஆம் திகதி 'இந்து' ஆங்கில நாளிதழில் இந்தக் கேலிச் சித்திரம் வெளியானது.

யாழ் குடா நாடு மீது விதிக்கப்பட்ட பொருளாதார முற்றுகையை தளர்த்தப் போவதாக இலங்கை அரசு அறிவித்தது அல்லவா! அதைக் கருப்பொருளாக வைத்து 'இந்து' நாளிதழ் இந்தக் கேலிச் சித்திரத்தை வெளியிட்டுள்ளது.

## பதுங்கியோர் மீதும் ஹெலித் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பயத்தினால் புளியமரத்துக்கு கீழ் பதுங்கி இருந்தோர் மீது நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தியதில் இரண்டு பேர் காயமடைந்தனர்.

நேற்று மயிலிட்டிப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

சட்டுவன் பகுதியில் நேற்று தாழப் பறந்த ஹெலிக்கொப்டர் ஒன்றைக் கண்டு வாகனங்களில் பயணம் செய்த சிலரும் அப்பகுதியில் நின்ற வேறு சிலரும் பாதுகாப்புக் கருதி புளியமரம் ஒன்றிற்குக் கீழ் பதுங்கிக் கொண்டனராம்.

இதனைக் கண்ட சிப்பாய்கள் ஹெலிக்கொப்டரை மேலும் தாழ்ப் பதித்து இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனராம்.

இதனால் பீதியடைந்தோர் தாம் மறைந்திருந்த மரத்தைச் சுற்றிச் சுற்றி ஓட்டம் பிடித்தனர்.

எனினும் இரண்டுபேர் காயமடைந்தனர். புளியமரக் கொப்புகளும் முறிந்து வீழ்ந்தன.

புளியமரத்துக்கு கீழ் நின்ற வான் ஒன்றும் பலத்த சேதமடைந்தது.

காயமடைந்தவர் வானின் சாரதியான இளையவி கதிரவேலு (வயது 60) என்பவராவர்.

## குமரி அனந்தன் குழு காங்கிரஸில் சேர்ந்தது

சென்னை, மார்ச் 28

காந்தி காமராஜர் காங்கிரஸ், இந்திரா காங்கிரஸுடன் இணைந்து கொண்டது.


காந்தி காமராஜர் காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் தலைமையில் அனைவரும் இந்திரா காங்கிரஸில் நேற்றுச் சேர்ந்து கொண்டனர்.

தமிழ் நாடு சட்டசபையில் காந்தி காமராஜர் காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், எஸ் எல் இராமசாமி ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர்களின் கட்சி இணைந்து கொண்டதால் தமிழ்நாடு சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏக்களின் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்துள்ளது.

1984 சட்டசபைத் தேர்தலில் குமரி அனந்தனின் காங்கிரஸ், அ.இ.மு.க வுடன் கூட்டுவைத்துப் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது.

## 3 ஆவது நினைவு அஞ்சலி



அமரர் வே.க. இராசசுந்தரம்

தோற்றம்: 25-11-1905 மறைவு: 31 03 1984

திதி: சதுர்த்தசி 28.03.1987

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்து நம்மை நல்வழி இட்டு வளம் காண வசதி செய்த அன்புத் தெய்வத்திற்கு எமது இதய பூர்வமான அஞ்சலிகள்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
செறிடேக், சங்கானை.

(2818)

## வன்செயல் தொடரின் தீர்வு கஷ்டமாகிவிடும்
### நெய்வேலியில் ராஜீவ்

சென்னை, மார்ச் 28

இலங்கையில் வன்செயல்கள் தொடரும் வரை அந்நாட்டு இனப் பிரச்சினைக்கு நிலைத்த தீர்வு காணமுடியாது.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இதனை நான் இலங்கை அதிபருக்குத் தெரியப்படுத்தி இருக்கிறேன். இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது.

இவ்வாறு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நெய்வேலியில் நடந்த பொதுக்கூட்டத்தில்பேசுகையில் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தார்.

பெங்களூரில் இருந்து நெவேலிக்கு வந்த பிரதமரை, முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் வரவேற்றார்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி ஆலையின் இரண்டாவது அனல் மின்சார நிலையத்தை பிரதமர் பின்னர் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் முதல்வர் எம் ஜி ஆரும் உரையாற்றினார்.

அதன் பின்னர் பிரதமர் சென்னைக்கு நேற்று மாலை வந்தார். சென்னை தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழா-

தென் இந்திய வர்த்தக சபையின் பவள விழா- ஆகியவற்றில் பிரதமர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(ஆ-ஈ)

## அமைச்சர் இராஜினாமா

கல்கத்தா, மார்ச் 28

இந்திய மத்திய அரசின் சட்ட அமைச்சர் அசோக் சென் பதவியை இராஜினாமாச் செய்து விட்டார்.

(க-ஈ)

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியும் சினேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் இன்று மோதுகின்றன.

இந்த ஆட்டம் இன்று காலை 9.00 மணியளவில் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (உ-7)

## பதுங்கு குழி அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ் குடாநாட்டில் மீண்டும் குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் ஆகாயத் தாக்குதல்களை நடத்தி வருவதாலும்-

இராணுவ முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்கள் அடிக்கடி நடைபெறுவதாலும் பொதுமக்கள் பதுங்கு குழிகளை அமைத்துக் கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (க-10)

## இந்து -- ஸ்கந்தா கிரிக்கெட் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ் மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் பருவகாலம் மேலும் நீடிக்கப்படுகிறது

இந்தப் பருவகாலத்தில் நடைபெறமாட்டாது எனக் கருதப்பட்ட யாழ் இந்து-சுன்னாகம் ஸ்கந்தவரோதயா அணிகளுக்கிடையிலான கிரிக்கெட்மோதல் வெகு விரைவில் நடைபெறும்.

யாழ் இந்துக் கல்லூரியின் உபஅதிபரும், விளையாட்டுப் பொறுப்பாசிரியருமான காப்டன் சோமசுந்தரம் சஞ்சீவிக்கு இதனை வார்ஜிதம் செய்தார்.

இந்த ஆட்டம் நடைபெறும் இடமும் திகதியும் பின்னர் முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வருடமும் நடைபெறாது என்று எதிர்பார்க்கப்பட்ட சென்றல்—சென்ஜோன்ஸ் கிரிக்கெட் ஆட்டத்தையும் எதிர்வரும் 3, 4 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

## எஞ்ஜின் ஒயில் மீள ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஆனையிறவு முகாமில் பறிமுதல் செய்யப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலைக்கு சொந்தமான 11 கலன் எஞ்ஜின் ஒயிலும் நேற்று மீள ஒப்படைக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை பறிமுதல் செய்யப்பட்ட ஒயில் கலன்கள் தொடர்பாக டிப்போ உரத்திகாரிகள் யாழ்.அரச அதிபருடனும் இராணுவ அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டனர்.


இதனைடுத்தே நேற்று இவை மீளளிக்கப்பட்டன. (உ-10)

## ஊறணி..-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வங்களினும் காங்கேசன் துறை மகாவித்தியாலயம், இலங்கை வங்கிக் கிளை, வேறு ஆறு கடைகள் என்பன பாதிக்கப்பட்டன.

ஊறணி, காங்கேசன் துறைப் பகுதிகளில் இருந்து அதிக மக்கள் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம், கன்னாதிட்டி உள்ள ஒரு பாடசாலை ஆகியவற்றிற்கும் உறவினர் வீடுகளுக்கும் இடம் பெயர்ந்தனர். (உ-10-119)



## பாளையில் வடலி!

வல்வெட்டித்துறை, மார்ச் 28

பனம் விதையில் இருந்து தான் வடலி முளைக்கும். இது தான் இயற்கை.

ஆனால் பாளையில் இருந்து வடலி உண்டாகுமா?

உண்டாகியிருக்கிறது. இந்த அதிசயம் பொலிகண்டியில் இடம்பெற்று உள்ளது.

சல்லிப்பிள்ளையார் கோவில் பூசகர் திரு. கணபதிப்பிள்ளை கனகசபைக்கு சொந்தமான கோயிலுக்கு முன்பாகவுள்ள காணியில் கால் நடை உணவுக்காக ஓலை வெட்டுவதற்கு தொழிலாளி ஒருவர் பனையில் ஏறினார்.

அப்போது தான் பாளையில் முளைத்து இருந்த வடலியைக் கண்டார்.

4 அடி உயரமான இப்பனையை வெட்டி கீழே இறக்கினார்.

கடந்த புதன்கிழமை இப்பனை பருத்தித் துறையில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

யாழ் பண்டிதர் சாலையத்தில் இது காட்சிக்கு வைக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது. (க-எ-160)

## மூலவளமும்--

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கிறேம்.

கல்வியே கருந்தனம் என்றாலும் கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்வதும் அவசியம். கைத்தொழில் என்பது தொழில் நுட்பம், தொழிற் பயிற்சி ஆகிய இரண்டுக்கும் பொருந்தும். மாணவர்கள், இளைஞர்கள் இதனை நன்கு உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

## வீடியோ படமும் விமர்சனமும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தின் ஆதரவில் நாளை ஞாயிறு பிற்பகல் 3-00 மணிக்கு சங்க மண்டபத்தில் 'தணியாத தாகம்' வீடியோப் படக்காட்சியும் விமர்சனமும் நடைபெறும் அன்று முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை புத்தகக் கண்காட்சியும் நடைபெறும்.

கரவைக் கிழாரால் எழுதப்பட்ட (தணியாத தாகம்) பனங்காம மன்னன் கயிலை வன்னியனின் சரித்திர வரலாற்று நாடகத்தை உள்ளூர் நடிகர்கள்மூலம் வீடியோப் படமாகத் தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஓவியர்கள் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 28

மாணவர் இளைஞர் பொதுமன்றத்தின் (கைஸ்) கலை, கலாசாரக் குழுவினால் நாளை 29 ஆம் திகதி ஓவியர்கள் ஒன்றுகூடலும், கலந்துரையாடலும் நடத்தப் படவுள்ளன.

நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஓவியக் கலையில் ஆர்வமுள்ளோரும் ஓவிய ஆசிரியர்களும் பங்கு கொள்ளலாம். (க-10)

## இணைப்புக்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு, கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழுக் கூட்டம் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

சகல பிரசைகள் குழுக்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில், கலந்து கொள்வர். (உ-எ)

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கைவங்கியின் 27-03-87 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்).

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 45. 49 |
| அமெ. டாலர் | 28. 64 |
| இந்திய ரூபா | 2. 19 |
| ஜேர்மன் மார்க் | 15. 59 |
| கனடா டாலர் | 21. 54 |
| பிராங்(பிரெஞ்சு) | [illegible] |
| பிராங்(சுவிஸ்) | 18. 54 |
| அவுஸ். டாலர் | 19. 30 |

மீண்டும் ஓர் சந்தர்ப்பம்!
பிரபல கிரிக்கெட் வீரர் தெரிவு
வாக்களிப்பு நீடிப்பு
ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பாடசாலை அணிகளுக்கிடையிலான சில கிரிக்கெட் மோதல்கள் இவ்வாரம் நடைபெற இருப்பதால் மேற்படி போட்டி இன்னும் ஒரு வாரம் நீடிக்கப்பட்டுள்ளது.
முடிவு திகதி: 05.04 1987
05.04.1987 ஞாயிறு மாலை 5.00 மணி வரை அளிக்கப்படும் வாக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும். கூப்பன்களும் அத்திகதிவரை உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியாகும்.
உங்கள் அபிமான வீரரை வடக்கின் பிரபல கிரிக்கெட் வீரராக தெரிவு செய்ய இன்னமும் அவகாசம் உள்ளது.
உங்கள் வாக்குகளை விரைந்து அளியுங்கள்.
— கிரிக்கெட் போட்டிக் குழு

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொலிஸ்ரார்ஸ் லியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரரை வாசகர்கள் தெரிவு செய்யும் போட்டி



வீரரின் பெயர் ______
கல்லூரி ______
வாக்காளர் பெயர் ______
விலாசம் ______
ஒப்பம் ______

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 28 - 03 - 1987 தொலைபேசி இல. 24805, 22078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org